Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAARTHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 கார்த்திகை 26 12 - 12 - 94 திங்கட்கிழமை ஓசை 297

## விசேட பாடநெறிகளுக்கென 500 மாணவர் பல்கலைக்கு அனுமதி

விசேட பாடங்களில் பட்டப்படிப்புகளை மேற்கொள்ளவென 1993-94 கல்வியாண்டிற்காக மேலும் 500 மாணவர்களை சேர்க்க பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. 1992 ஆகஸ்டில் நடந்த உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் இவர்கள் தெரிவாவர். வரலாறு, சமஸ்கிருதம், ஆங்கிலம், கிறிஸ்தவம், இந்துமதம், ரோம நாகரிகம், மொழியியல், நாடகவியல் என்பனவே விசேட பாடநெறிகளாகும். இந்த பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கக்கூடிய மாணவர்கள் நான்கு பாடங்களிலும் 200க்கு மேற்பட்ட மொத்த புள்ளிகளை பெற்றிருக்க வேண்டும். அத்துடன் விசேட பாடத்தில் திறமை சித்தியாவது பெற்றிருக்க வேண்டும் என பல்க லக்கழக மானிய ஆணைக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# இம்மாத இறுதியில் நடைபெறவிருந்த சந்திரிகாவின் இந்திய விஜயம் ரத்து

## இந்தியப் பத்திரிகைகள் தெரிவிப்பு

(டில்லி)

சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இம் மாதம் மூன்றாம் வாரத்தில் இந்தியாவிற்கு மேற்கொள்ள இருந்த விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டதாக இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. ஜனாதிபதி சந்திரிகாவிற்கு எதிரான சில ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறலாம் என்பதே அவர் தமது பயணத்தை ஒத்திவைத்தமைக்குக் காரணம் எனவும் அவை தெரிவித்துள்ளன.

சிறிலங்காவின் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிய இரு வாரங்களுக்குள் ஜனாதிபதி சந்திரிகாவின் இந்தியப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரியவருகின்றது.

ஜனாதிபதி சந்திரிகாவின் விஜயம் இம்மாதம் மூன்றாம் வாரத்தில் மேற்கொள்ளப்படவிருந்தது. எனினும் அவருக்கு எதிராக ஜனதா கட்சி தலைவர் சுப்பிரமணிய சுவாமி நடத்தவிருந்த கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் காரணமாகவே சந்திரிகாவின் இந்திய பயணம் திடீரென இடைநிறுத்தப்பட்டதாக இந்திய தினசரிகள் செய்தி வெளியிட்டுள்ளன.

புதுடில்லி சந்திரிகாவை வரவேற்க மிக உற்சாகமாக இருந்ததாகவும் இவ்விஜயம் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டமை இந்தியாவுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியதாகவும் உயர்மட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா புலிகளுடன் நடத்தும் பேச்சுகளை கைவிட்டு புலிகளின் தலைவர் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்காவிட்டால் அவருக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டுவோம் என சுப்ரமணிய சுவாமி எச்சரித்திருந்தார்.

திருமதி சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதி பதவி ஏற்றபின் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் தமது முதல் விஜயம் இந்தியாவிற்கானதாகவே இருக்கும் என சூசகமாக குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

## இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டால் இந்திய-சிறிலங்கா உறவு வளருமாம்

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் இந்திய -இலங்கை ... லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

பிரதமர் ராவுடன் நடைபெற்ற பேச்சுகள் ஒளிவ... டன் அரசு சமாதானப் பேச்சை ஆரம்பித்துள்ளதை இந்தியப் பிரதமர் வரவேற்றார் ...

### விசேட மாணவர் அரங்கு

ஆண்டு 9 மாணவர்களுக்கு நாளை மறுதினம் நடைபெறவுள்ள கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் ...

## கணிதபாட வினாத்தாள் முன்கூட்டியே வெளியானது

### விசாரணைக்கு திணைக்களம் உத்தரவு

(கொழும்பு)

நடைபெற்று வரும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சை வினாத்தாள் ஒன்று முன்கூட்டியே வெளிவந்தது குறித்து பரீட்சை ஆணையாளரினால் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

கணிதபாட வினாத்தாளே வெளியானதாகவும் இது தொடர்பாக குறிப்பிட்ட அப் பாடசாலை பரீட்சை மேற்பார்வையாளர் ஏற்கனவே வெளியேற்றப் பட்டுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். இச் சம்பவம் பரீட்சையை பாதிக்கும் அளவில் இருக்கவில்லையென்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

## கனிஷ்ட தொழில் நுட்ப சான்றிதழ் பரீட்சை பரீட்சார்த்திகளிடையே பெரும் குழப்பநிலை

(யாழ்ப்பாணம்)

கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சார்த்திகளிடையே பெரும் குழப்பநிலை தோன்றியுள்ளது.

கடந்தவருடம் ஆண்டு ஒன்பதில் கற்ற மாணவர்களுக்கு மேற்படி சான்றிதழ் பரீட்சை நடைபெறவில்லை. இவ்வருடம் ஆண்டு ஒன்பது மாணவர்களுக்கு நாளை மறுதினம் ... மட்டுமே பரீட்சை நடைபெறும் எனவும் சில பாடசாலை


(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனவரி நடுப்பகுதியில் வெட்டுப்புள்ளி வெளிவரும்

(கொழும்பு)

1994-95 கல்வியாண்டிற் ... பெற்ற உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்க ...

## வீரச்சாவு



### வீரவேங்கை மகிழ்னன்

மணலாற்றுப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இராணுவத்துடன் ஏற்பட்ட திடீர் மோதலொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை மகிழ்னன் (தேவதாஸ் சசிகரன், இரம்பைக்குளம், நெடுங்கேணி) என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இலங்கையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டால் இந்திய - இலங்கை உறவுமேலும் விருத்தியடையும் என இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார். என வெளியுறவு அமைச்சர்

வித்தார்.

பிரதமர் ராவுடன் நடைபெற்ற பேச்சுகள் ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாக மனம்திறந்து நடைபெற்றதாகவும் கதிர்காமர் தெரிவித்தார். விடுதலைப்புலிகளு

சை ஆரம்பித்துள்ளதை இந்தியப் பிரதமர் வரவேற்றார் பேச்சுகள் வெற்றிபெற வேண்டும் என அவர்விரும்புகின்றார் என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள கனிஷ்ட தொழில்நுட்ப சான்றிதழ் பரீட்சைக்கான மாதிரி வினாக்களும் அதற்கான விடைகளும் நாளை வெளிவரும்.

நடைபெறவில்லை. இவ்வருடம் ஆண்டு ஒன்பது மாணவர்களுக்கு நாளை மறுதினம் நடைபெறவிருக்கும் மேற்படி பரீட்சையுடன் சேர்த்து நடைபெறும் எனவும் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது ஆண்டு பத்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு இப்பரீட்சை நடைபெறாது எனவும் ஆண்டு ஒன்பது மாணவர்களுக்கு

(கொழும்பு)

1994-95 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக மாணவர் பதிவு குறித்தும் பல்கலைக்கழக அனுமதி வெட்டுப் புள்ளி பற்றியும் எதிர்வரும் ஜனவரி நடுப்பகுதியில் அறிவிக்கப்படும் என பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1993 ஆகஸ்ட்டில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களில் இருந்து இத்தெரிவு நடைபெறும். அடுத்த கல்வியாண்டில் சுமார் 9000 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் மருத்துவ பிரிவுக்கு அதிகமானோர் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

# யுத்தநிறுத்தத்தை அறிவித்து சமாதானத்திற்கு வழிவகுக்க!

## கனேடிய அரசியற் பிரமுகர் அரசிற்கு கடிதம்

(கொழும்பு)

யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி பொருளாதாரத் தடையை நீக்கி, சமாதானப் பேச்சுகளுக்கு வழி வகுக்கவும் என ஜனாதிபதி சந்திரிகாவிற்கு கனேடிய அரசியல் பிரமுகர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இரு தரப்பும் பங்குபற்றும் யுத்தநிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தி யாழ். குடாநாட்டிற்கான பொருளாதாரத்தடையை அரசு நிரந்தரமாக நீக்கினால் சமாதானப்பேச்சு நடத்தமுடியும் எனக் கூறப்பட்டுள்ளதால் இதை அமுல்படுத்துவது தொடர்பாக உங்கள் அரசுடன் ஆலோசனை நடத்தலாம் என இலங்கையின் சமாதானத்திற்கான கனேடிய நிவாரண நிறுவனத்தின் கௌரவ போஷகரும், ஒன்ராறியோ சட்டசபை உறுப்பினருமான பொனி நியூற்மன் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போரினால் ஏற்பட்டுள்ள இன்னல்களை நான்

(6ஆம் பக்கம் பார்க்க)

# பொருட்களுக்கான தடை நீக்கப்பட்டும் ஈரற்பெரியகுளத்தில் கெடுபிடி

(வவுனியா)

வடபகுதிக்கு பொருட்கள் எடுத்துச் செல்ல இருந்த தடை நீங்கியபோதும் வவுனியா ஈரற்பெரியகுளம் தடை முகாம் படையினர் பல கெடுபிடிகளைச் செய்து பொருட்களை இடைநடுவில் பறித்துவிடுகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்று லொறியில் எடுத்து வரும் பொருட்களுக்கு சோதனை முகாமில் தடைவிதிக்கப்படுவதாக லொறி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்நடவடிக்கையில் படையினரின் விருப்பு வெறுப்பே அதிகம் காணப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்

# ஒரே தினத்தில் 15 லொறிகள் படையினால் திருப்பப்பட்டன

## வவுனியா சோதனை முகாமில் சம்பவம்

கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் 15க்கும் மேற்பட்ட லொறிகள் வவுனியா படையினரால் திருப்பியனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கொழும்பில் அத்தியாவசிய ஆணையாளரிடம் அனுமதி பெற்று வடபகுதிக்கு தடை நீக்கப்பட்ட பொருட்கள் கொண்டு வந்த லொறிகளே படையினரால் திருப்பியனுப்பப்பட்டன.

சீமெந்து எடுத்துவந்த லொறிகளில் எட்டு பைகளுக்கு மேற்பட்ட சீமெந்து பைகள் படையினரால் இறக்கப்பட்டன. சில சாரதிகளும், உதவியாளர்களும் படையினரால் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (நி)

# புல்மோட்டையில் வீடுகள் படையினரால் தீக்கிரை

(கொழும்பு)

கடந்த வியாழன் இரவுபுல்மோட்டைப் பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதலின் போது சில வீடுகள் தீயிடப்பட்டதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது. இச் சம்பவத்தில் பல தமிழர்கள் படையினரால் தாக்கப்பட்டும் உள்ளனர்.

இது குறித்து பிரதிபாது

(6ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலிப் படகில் ஒரு லட்சம் திருட்டு இரு படகோட்டிகள் கைது!

(தென்மராட்சி)

கிளாலிக்கடலில் படகில் பிரயாணம் செய்த பயணிகளிடம் ஒருலட்சம் ரூபாவைத் திருடிய இரு படகோட்டிகள் காவல்துறையினரிடம் அகப்பட்டனர்.

இச் சம்பவம் கடந்த வியாழன் அதிகாலை நடைபெற்றது. கிளாலிக் கடல்வழியூடாக கொழும்பிலிருந்து திரும்பிய படகில் பயணம்செய்த உடுப்பிட்டி சந்தை வீதியைச் சேர்ந்த கந்தசாமி கிருபாகரன் என்பவர் தனது கைப் பையில் உடுபிடவைகள் உட்பட இதனோடு ஒருலட்சம் ரூபா பணத்தினையும், தங்க நகை மற்றும் றேடியோவும் வைத்திருந்தவேளை உதவிப் படகோட்டி ஒருவர் படகு அணியத்திற்குள் இருந்து மேற்படி பையில் இருந்த பணத்தினை திருடியுள்ளார்.

மேற்படி பயணி கரைவந்து இறங்கி பையினுள் பணத்தினை பார்த்தபோது பணம் இல்லாமல் இருந்ததை அடுத்து காவல்துறையினருக்கு அறிவித்தார்.

காவல்துறையினர் உடன் படகோட்டிகளை விசாரணைக்கு உட்படுத்தியபோது திருட்டு அம்பலமானது. பணம், உடுபிடவைகளும் மீட்கப்பட்டன.

இதேவேளை மீட்கப்பட்ட பொருள்களுடன்மேலதிகமாக சில பொருள்கள் உட்பட ஒருபையும் மீட்கப்பட்டுள்ளது இது யாருடையது என

(6ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கிற்கு இடமாற்றம்; பொலிசாருக்கு திடீர் சுகவீனம்

(கொழும்பு)

அண்மையில் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பொலிசாருக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டுள்ளது. யுத்த முனைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட ஏ. எஸ். பி. மட்டத்தில் உள்ள அதிகாரிகள் உட்பட பல பொலிசார் தாம் சுகவீனமுற்றுள்ளதாக அறிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் அரசியல் செல்வாக்கு காரணமாக நீண்டகாலம் தென் பகுதியில் பணியாற்றிய பலர் அண்மையில் புதிய அரசால் இடமாற்றப்பட்டனர். ஐந்து வருடங்களுக்கு மேலாக போர் முனையில் பணியாற்றியவர்கள் ஏனைய பகுதிகளுக்கு இடம் மாற்றம் பெறவுள்ளனர்.

அண்மையில் மகியங்கனையில் பயிற்சி பெற்று வெளியேறிய பல பொலிசார் போர் முனைக்கு அனுப்பப்பட்ட போது அவர்களில் 50 க்கு மேற்பட்டோர் சுகவீனம் என கூறி தமது கடமையிடங்களுக்கு செல்லவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# வரி விளம்பரம்


## சைனா மகசீன்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் - வசந்தம் புத்தக நிலையம் [புதிய பஸ் நிலையம்] 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். [10360]

## அறிவித்தல்

கோண்டாவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசிங்கம் [நாவலப்பிட்டி] என்பவருடைய சாளி [CHALY] மோட்டார் சைக்கிள் வாங்கியவருக்கு அதற்குரிய முக்கிய ஆவணம் என்னிடம் இருப்பதால் தொடர்பு கொள்ளவும். 117, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம். [10364]

## ஒரு காலப் பெட்டகம் மீரா பிரசுரங்கள்

பாடசாலைகள், நூலகங்கள் ஆவணப் பாதுகாப்புக்கு, முதலாவது ஈழப்போர், இரண்டாவது ஈழப்போர், காலகட்டத்தில் போராட்டம் கலந்த மக்களின் வாழ்வை இயல்பாகச் சொல்லியுள்ள ''மீரா பிரசுரங்கள்'' விற்பனையாகின்றது. வசந்தம், ராஜன், பாலாஜி புத்தக சாலைகள், யாழ்ப்பாணம். [10332]

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதிக்கும் புனித பத்திரிசியார் கல்லூரிக்கும் அணித்தாய் 31 கதீட்ரல் வீதியில் அமைந்துள்ள 3/4 பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு; 31 கதீட்ரல் வீதி (பிலிப்ஸ் டிஸ்பென்சரிக்கு முன்னால்) யாழ்ப்பாணம். (10372)

## தையல் - மனையியல் பயிற்சி நெறி

பருத்தித்துறை பிரதேசத்தில் கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் தையல், மனையியல் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சி நெறியில் தையல், மனையியல் பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் யுவதிகள் க. பொ. த. (சாதாரண) தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதோடு 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட வயதைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும் என்வும் கோரப்பட்டுள்ளது.


## மின்சாரம் தாக்கியதால் கான்ஸ்டபிள் ஒருவர் பலி

(ஏறாவூர்)

ஏறாவூர் தளவாய்க் கிராமத்து எல்லைக் காவலரண் ஒன்றில் கடமையில் இருந்த பொலிஸ்கான்ஸ்டபிள்ஒருவர் மின்சாரத்தினால் தாக்கப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பன்னலை என்னுமிடத்தைச் சேர்ந்த எஸ். பி. றியந்த (வயது 22) என்பவரே இவ்விதம்பலியானவராவார்.

அடைமழை பெய்துகொண்டிருந்தவேளையில் தரையில் வீழ்ந்துகிடந்த மின் கம்பியை பிடித்து உயர்த்திவிட முற்பட்ட போது மின்சாரம் இவரைத் தாக்கியிருக்கலாம் என தெரிய வருகின்றது.

மறுநாள் காலையில் பிரேதத்தை மீட்ட போது கையில் மின்சாரஎரிகாயங்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வெள்ள நிவாரணம்வழங்க 23லட்.ரூ. கெயர் பெற்றது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில்ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென 23 லட்சம் ரூபா கெயர் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. நோர்வே, சுவிஸ், நெதர்லாந்து ஆகிய நாடுகள் இந் நிதியை வழங்கியுள்ளன.

ஓட்டமாவடியில் 2 000 குடும்பங்களுக்கும், பட்டிப்பளையில் 1000 குடும்பங்களுக்கும், வவுணதீவில் 1500 குடும்பங்களுக்கும், போரதீவில் 2000 குடும்பங்களுக்கும் உலர் உணவு வழங்குவதற்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

இது தவிர அகதி முகாம்களிலுள்ள 888 குடும்பங்களுக்குத், தலா 800 ரூபா பெறுமதியான உடுபுடவைகளும் வழங்கப்பட்டுள்ளது.

## இளம் பிக்கு மாணவர் காலியில் அடித்துக் கொலை

(கொழும்பு)

தெந்தர சிறி புஷ்பராம விகாரையின் முன்பாக இளம் பிக்கு சாகும்வரை அடித்துக் கொல்லப்பட்டார். இவ் விகாரையுடன் இணைக்கப்பட்டிருந்த வித்தியாலோக பிரிவேனாவின் மாணவனான மகேன் பக்னசிறி தேரோ (24 வயது) என்பவரே அடித்துக் கொல்லப்பட்டவராவார்,

இவரது சடலத்தை பொலிசார் மீட்டபோது கால்கள் கயிற்றால் கட்டப்பட்டு தொங்கவிடப்பட்ட நிலையில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அத்துடன் அவரது அந்தரங்க உறுப்பிலும் காயங்கள்காணப்பட்டுள்ளன. இந்த இளம் பிக்கு தமது அறையிலிருந்து வெளியே இழுத்து வரப்பட்டு இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக காலிப் பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## தேசிய கல்வி நிறுவனம் அரசாங்க அமைப்பல்ல

### - சபையில் கல்வி அமைச்சர்

அறுபது வயதுக்கு மேற்பட்டோர் அரசாங்க சேவையில் நியமனம் பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பது தேசிய கல்வி நிறுவனத்திற்கு பொருந்தாது. இவ்வாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் ஒத்திவைப்பு வேளையில் ஐ.தே.க. எம் பி ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்து அமைச்சர் மேலும் கூறுகையில், தேசிய கல்வி நிறுவனம் என்பது அரசாங்கத்தின் அமைப்பு அல்ல. எனவே இதன் பணிப்பாளராக டாக்டர் பி. உடுகம நியமிக்கப்பட்டமை அரசாங்கத்தின் முடிவை மீறிய ஒரு செயல் அல்ல. இந்நியமனத்தின் போது தகுதியான பொருத்தப்பாடு பற்றி மட்டுமே பார்க்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

## சமகால அரங்கியல் வளர ஆற்றுகை துணை புரியும்

(குருநகர்)

''ஆற்றுகை'' சஞ்சிகை ஈழத்தின் சமகால அரங்கியல் வளர்ச்சியில் தோள் கொடுத்து துணைபுரியும்''

கடந்த புதன்கிழமை மாலை யாழ்மறைக் கல்வி நடுநிலைய மண்டபத்தில் வெளியிட்டு வைத்த ''ஆற்றுகை'' காலாண்டுச் சஞ்சிகையின் வெளியீட்டுரையை நிகழ்த்தியதிருமறைக் கலாமன்ற பொதுச் செயலர் திரு. வி. ஜே. கொன்ஸன்ரைன் மேற்கண்டவாறு கூறினார்.

''கலைப் பேரரசு''ஏ.ரி. பொன்னுத்துரை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. வி. ஜே. கொன்ஸன்ரைன் மேலும் தெரிவித்ததாவது;

''அரங்கியல் கலை உலகளாவிய ரீதியில் வளர்ந்து வருகிறது. அதே சமயம் பாடசாலைகள், பல்கலைக்கழகங்களிலும் கற்கை நெறியாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. அத்தேவைகளுக்கு ஆற்றுகைச் சஞ்சிகை ஓரளவுக்கேனும் உறுதுணை புரியும்'' என்றார்.

அருட்திரு.லம்பேட் அடிகள் ஆசியுரையையும், திருவாளர்கள் பி.சி. ஆனந்தராசா, எஸ். ஜெயசங்கர் ஆகியோர் மதிப்பீட்டுரைகளையும் நிகழ்த்தினர்.

1994-ஆம் ஆண்டு நாடகப் பயிலகத்தில் பயிற்சியை முடித்துக் கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டதை அடுத்து அவர்களால் தயாரிக்கப்பட்ட ''நுளம்புகள்'' நாடகம் அரங்கேற்றப்பட்டது.

திரு.நவீந்திரன் நன்றி தெரிவித்தார். (21)

## மீன் சந்தை அமைப்பு

(வடமராட்சி)

பொலிகண்டி மேற்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் ஐம்பதினாயிரம் ரூபா செலவில் மீன் சந்தை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இச் சந்தைக்கு சங்கத் தலைவர் ந. தங்கவேலாயுதம் அவர்களினால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. (யோ)

## மீட்க வேண்டிய நிலையில் இன்னும் 1700 ஆயுதங்கள்

### பொலிஸ்திணைக்களம் அறிக்கை

(கொழும்பு)

ஐ.தே.க அரசியல்வாதிகளிடமிருந்தும், அவர்களது சகாக்களிடமிருந்தும் நவம்பர் 30-ம் திகதிவரை 326 சட்டவிரோத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸ் திணைக்களம் கூறியுள்ளது.

பொலிஸ் திணைக்களம் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், 108 ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், 110 பேர் இது தொடர்பாக கைது செய்யப்பட்டதாகவும், கூறியுள்ளது. இந்த 108 ஆயுதங்களில் 22 றிப்பீட்டர்கள், ஒரு பிஸ்டல், 18 றிவால்வர்கள், மூன்று தன்னியக்க துப்பாக்கிகளும் 152 வேட்டைத் துப்பாக்கிகளும், 2 கால்கஸட்ரோக்களும் அடங்கும்.

மேலும சுமார் 218 ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. முன்னாள் அமைச்சர்களான ஜோன் அமரதுங்காவும், பெஸ்டஸ்பெரேராவும் தமது பொறுப்பிலிருந்த துப்பாக்கிளை தாமாகவே ஒப்படைத்துள்ளனர்.

இன்னமும் சுமார் 1700 ஆயுதங்கள் மீட்கப்பட வேண்டி இருப்பதாகவும் நீர்கொழும்பில் அண்மையில் நடத்திய தேடுதல் ஒன்றின் மூலம் கடந்த அரசாங்க காலத்தில் அமைச்சர்களுக்கு பெருமளவு தன்னியக்கத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருந்தது தெரிய வந்திருப்பதாகவும்பொலிசார் கூறியுள்ளனர்.

இதனையடுத்து யார் யாருக்கு எத்தகைய ஆயுதங்கள் வழங்கப்பட்டன என்பது தொடர்பான முழுமையான தகவல்களையும் தந்துதவும்படி பொலிஸ் திணைக்களம் இராணுவத்தைக் கோரியுள்ளது.

## உள்ளூர் மீன் வளர்ப்புக்கு உதவ அரசு பின்னடிப்பு

### விஞ்ஞானிகள் குற்றச்சாட்டு

## சட்டவிரோத முறையில் கட்சிஅலுவலகம் அமைப்பு

### நீர்கொழும்பு நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

நீர்கொழும்பு பகுதியில் பொதுசன ஐக்கிய முன்னணியின் அலுவலகம் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருப்பதாக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் இப்பகுதி அமைப்பாளரும் மாகாணசபை உறுப்பினருமான ஆனந்த முனசிங்கவும், இம்மானுவேல் லெனாட் பீரிஸ் என்பவரும் சேர்ந்து கடந்த நவம்பர் 19-ம் திகதியன்று நீர்கொழும்பு பிரதான வீதியிலுள்ள 82-ம் இலக்க கட்டடத்தில் இயங்கிய தனது அலுவலகத்தை பலாத்காரம் மூலம் திறந்து அதில் பொதுசன ஐக்கிய முன்னணி அலுவலகத்தை அமைத்ததாக ஹென்றி பெர்னாண்டோ என்பவர் நீர்கொழும்பு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்துள்ளார்,

இது தொடர்பாக பொலிசாரிடம் புகார் தெரிவிக்கப்பட்ட போதும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் தமது வழக்கில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கு கடந்த செவ்வாயன்று நீதிமன்றத்தில்விசாரணைக்குவந்தபோதுநீதிமன்றத்தில் இருந்த அனைத்து சட்டத்தரணிகளும் முறைப்பாட்டாளருக்கு ஆதரவாகப் பேசினர்.

## அனைவரும் சித்தி

1993 ஒக்டோபர் மாதம் பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்பட்ட பரீட்சையில் யா/இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறியைச் சேர்ந்த அனைத்து ஆசிரியர்களும் பகுதி i, பகுதி ii இல் தோற்றிய மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்துள்ளதாக சிரேஷ்ட போதனாசிரியர் திரு ச. சரவணமுத்து அவர்கள் தெரிவிக்கிறார். இவர்கள் அனைவரையும் வருகிற வெள்ளிக்கிழமை 16. 12. 94 அன்று காலை 9. 00 மணிக்கு நிலையத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகிறார்கள்.

## பருத்தித்துறை துறைமுகத்தில் மண்ணெய் இறக்கப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை இறங்கு துறையில் நேற்று முன்தினம் மட்டும் ''மாகோ'' கப்பலில் இருந்து 1607 பரல் மண்ணெண்ணெய்இறக்கப்பட்டுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்தது.

இம் மண்ணெண்ணெய் பரல்கள் இழுவைப்படகுகள் ஏதுமின்றி கடலில் இறக்கப்பட்டு கரைக்கு கொண்டு வந்து சேர்க்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் மண்ணெண்ணெய் விலையேற்றத்தைக்கட்டுப்படுத்தும் முகமாக இந்த துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனை அடுத்து இறக்கப்பட்ட மண்ணெண்ணெய் பருத்தித்துறை இறங்கு துறைக் கரையில் வைத்தே பல நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (பா. தி)

## வரவு இடாப்பு சமர்ப்பிக்குக

எதிர்வரும் 14ஆம் திகதியன்று நடைபெறவுள்ள கனிஷ்ட தொழில்நுட்ப தேர்வுக்கு தோற்றும் மாணவரின் வரவு இடாப்பு பட்டியலைப் பெற்ற பாடசாலை அதிபர் அல்லதுஅவரதுபிரதிநிதிவரவு இடாப்புடனும், அதன் பிரதி ஒன்றுடனும் தத்தம் கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளரை இன்று திங்கள் சந்திக்கும்படி கல்வி வலயம் 1 இன் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.


## நினைவு கூருகின்றோம்...

12.12.1994

1987-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-தளவாய்

எனவும் கோரப்பட்டுள்ளது. கேள்வி ஒன்றுக்கு பதிலளித்து ப்பிட்டார்.

# 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் **வல்லிபுரம் வேலும்மயிலும்**

தோற்றம்: 28.12-1932 மறைவு: 13-11-1994

தன்னுயிரிலும் மேலாக எமைமதித்து எம்துயர் துடைத்து விதிவழியாய் எமைப்பிரிந்து இறைவனடி சேர்ந்த எம் தெய்வத்தந்தையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அம்மன் கோவிலடி,
வதிரி,
கரவெட்டி.

(10371)

மனைவி,
மக்கள்.

## விஞ்ஞானிகள் குற்றச்சாட்டு

[கொழும்பு]

உள்ளூர் மீன் வளர்ப்புத் துறைக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறியஉறுதிமொழியில் அரசாங்கம் உறுதியாக இல்லையென்று தேசிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த அரசாங்க காலத்தில் உள்ளூர் மீன் வளர்ப்பிற்கென வழங்கப்பட்டு வந்த உதவி சில பௌத்த பிக்குகளின் வேண்டுகோளைத் தொடர்ந்து ஒருதலைப்பட்சமாக நிறுத்தப்பட்டது தெரிந்ததே. இவ்வாறு நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து உள்ளூர் மீன் வளர்ப்புக்கென கட்டப்பட்ட 32 நீர் நிலைகள் பல்தேச நிறுவனங்களிடம் வழங்கப்பட்டிருந்தது.

இதனை அப்போது வன்மையாக கண்டித்த பொதுஜன ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்த பின்பும் இதுவரை இதற்கான உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

## அரச அதிபர் தலைமையில் செவ்வாயன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலகத்தில், புதிய அரச அதிபர் தலைமையில் செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறும் கூட்டத்திற்கு யாழ். மாவட்டத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், அத்தியாவசிய சேவைதொடர்பான திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

15 ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு செயலகத்தில் அவசரகால புனரமைப்பு தொடர்பான கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

(தி) - (பா)

## தொடர் அமர்வு ஆரம்பம்

வட்டுக்கோட்டை தொலைக்கல்வி நிலையத்தில் பயிற்சி பெறும் 1-ம், 2-ம் வருட (91 / 94, 93 / 95) ஆசிரிய மாணவர்களுக்கான 5 நாள் தொடர் அமர்வு 15.12.94 அன்று ஆரம்பமாக இருப்பதால் சகல பயிலுனர் ஆசிரியர்களையும் சமுகமளிக்கும்படி சிரேட்ட போதனாசிரியர் கேட்டுள்ளார்.

## விசேட அறிவித்தல்

விடயம் - சங்க அங்கத்தவர்களை, உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உரிய, புதிய அங்கத்துவ அறிமுக கைஏடுகள் வழங்குதல்.

1995-ம் வருடத்திற்குரிய, அங்கத்தவர்கள் அறிமுக கையேடுகள், வழங்கப்பட்டுவருகின்றன. தமது பகுதி கிளைகளுடன் தொடர்பு கொண்டு, கையேடுகளை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

நன்றி

மாவட்ட செயலாளர்,
சீமெந்து கட்டிட தொழிலாளர் சங்கம்.

(10366)

1987-ம் ஆண்டு இதேதினத்தில் மட்டு-தளவாய் கடற்கரையில் இந்தியப்படையினரால் கொலை செய்யப்பட்டு எமைப் பிரிந்த,

**உதயன்** (நாராயணன் உதயச்சந்திரன்-பொத்துவில்-மட்டு)

யாழ்ப்பாணத்தில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**முகமட்** (தங்கராசா பரமேஸ்வரன்-வல்வெட்டித்துறை - யாழ்)

பேருந்தில் வவுனியா செல்லுகையில் இந்தியப் படைகைது செய்தபோது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**விமலன்-தம்தோம்** (இராசரத்தினம் விமலசிவம் சுதுமலை, மானிப்பாய்-யாழ்)

1988-ம் ஆண்டு குமுழமுனை-நந்தபுரத்தில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**யோகன்** (மாசிலாமணி யோகேஸ்வரன்-குமுழமுனை-மணலாறு)

தமிழீழக் கடற்பரப்பில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட படகுவிபத்தில் எமைப்பிரிந்த.

**லெப்.சிவகரன்** (செல்லத்துரை ஜெரால்ட் ஜெயந்திரன்-புனிதஆசீர்வாதப்பர்வீதி-யாழ்)

1992-ம்ஆண்டு மணலாறு-முந்திரிகைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**லெப்.மணியம் - சுகுமார்** (கந்தசாமி செல்வராசா-சந்திவெளி மட்டு)

**லெப். மறைக்கோன் - சிறிகரன்** (முத்துவேல் விஜயகுமார்-வாழைச்சேனை-மட்டு)

**லெப். முத்தழகு - டியூட்டோன்** (காசிப்பிள்ளை சசிக்குமார்-களுவாஞ்சிக்குடி-மட்டு)

**லெப்.வரதன் -மைக்கல்** (முத்துராசா குமாரசிங்கம்-வட்டக்கண்டல்-மன்னார்)

**2-ம்லெப். கலைவாணி** (மதிவதனி செல்வராசா-மீசாலை தெற்கு-சாவகச்சேரி)

**மரியாள்** (வரலட்சுமி விநாயகமூர்த்தி - பண்டத்தரிப்பு-யாழ்)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும், தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10892)

## எரு விற்பனைக்கு உண்டு

கீழ்க்காண் விலாசத்தில் எரு விற்பனைக்குண்டு. வாங்குபவர்கள் அலுவலக நேரத்தில் எருவை பார்வையிட்டு கூறுவிலையை 19-12-94-ம் திகதிக்குமுன் சமர்ப்பிக்கவும். தபால் உறையில் இடது பக்க மேல் மூலையில் எருவிற்கான கூறுவிலை என எழுதுக.

பொது முகாமையாளர்,
யாழ். மாவட்ட அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.

(சி-10890)



## நம்பிக்கையின் சேவை

ஜெசித்தாரா 85%ற்கு மேற்பட்ட சுவை விரும்பிகளின் நம்பிக்கையை பெற்றுள்ளது காரணம், சுத்தம், தரம், நாணயம், யாழ். மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்று உங்கள் மங்கள நிகழ்வுகள், பிறந்தநாட் கொண்டாட்டங்கள், திருமண வைபவங்கள், பிரியாவிடை நிகழ்வுகள் எதுவானாலும் உங்கள் இடத்திற்கே வந்து பரிமாறும் சேவை வழங்குவோம். அல்லது எங்கள் மண்டபத்தில் உங்களது நிகழ்வுகளை இனிதாக்கித் தருவோம்.

ஒருமுறை எம்மை அணுகுங்கள்

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
முன் ஒழுங்கை,
சுண்டுக்குளி.

எமக்கு வேறு கிளைகளோ அன்றி முகவர்களோ இல்லை.

புது யுகத்தில் புது உருவம்
(சி-10866) ஜெசித்தாரா.



ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா வழங்கி வரும்

வழமையான உணவுப் பார்சல்களை தடையின்றி தாமதமின்றி முற்பகல் 11. 45 மணி முதல் பிற்பகல் 3. 30 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

விலை விபரம்:

மரக்கறி 30/-
இறைச்சி 35/-
மீன் 45/-

உணவுப் பொதிகளை உங்கள் சட்டைப் பைகளுக்கு ஏற்றவாறும் பொதிபண்ணித் தரப்படும்.
பதிவுகள் முன்கூட்டி ஏற்கப்படும்

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை)
சுண்டுக்குளி

எமக்கு வேறு கிளைகளோ முகவர்களோ இல்லை
புதுயுகத்தில் புது உருவம்
ஜெசித்தாரா (சி-10865)



## சமையல் ஒரு கலை

அதனை நாங்கள் உங்களுக்கு நயமுடன் வழி சமைத்


# கலன் தோட்ட நிலத்தை மீளப் பெற பௌத்த விகாரையினர் முயற்சி

## தொழிலாளர் மத்தியில் அச்சம்

(பதுளை)

பதுளை மாவட்டத்தில் உள்ள கலன்குறாப் தோட்டம் இப்பகுதியைச் சேர்ந்த பண்டாரபுர ரம்புக் பௌத்த விகாரைக்கு சொந்தமாகியுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இத்தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 800 தொழிலாளர்களும் அவர்கள் சார்ந்த குடும்பத்தினரும் தமது எதிர்காலம் குறித்து பெரும் கலக்கம் அடைந்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, கலன் குறாப் தோட்டத்தைச்சேர்ந்தசுமார் 600 ஏக்கர் காணி 1890ஆம் ஆண்டில் பண்டாரபுர ரம்புக் பௌத்த விகாரையிடமிருந்து 99 வருட கால குத்தகைக்கு பெறப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டுவரை வருடந்தோறும் மேற்படி பௌத்த விகாரைக்கு குத்தகைப் பணம் கலன் குறாப் தோட்டத்திலிருந்து வழங்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த நான்கு ஆண்டுகளாக இக் குத்தகைப்பணம் வழங்கப்படவில்லை. இத்தோட்டத்தின் முகாமைத்துவம் தற்போது தனியார் கம்பனிகளிடம் வழங்கப்பட்டுள்ளது. இத் தோட்டம் நட்டத்தில் இயங்குவதாகக் காரணம் காட்டி தோட்ட நிர்வாகம் குத்தகை வழங்க மறுப்புத் தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இத் தோட்டக்காணியை மீளப் பெறும் முயற்சியில் பௌத்த விகாரை ஈடுபட்டுள்ளது. கலன் குறாப் தோட்டத்தில் 800 தொழிலாளர்கள் பணி புரிவதுடன் 23 தொழிலாளர் குடியிருப்புக்களும், 20 குவாட்டர்சுகளும் இருக்கின்றன.

# இம்முறை கோமாரியிலும் தபால்கள் செல்லும்

(யாழ்ப்பாணம்)

இம்முறை 'கோமாரி' கப்பலில் வெளிமாவட்டங்களிற்கான தபால் பைகள் எடுத்து செல்லப்படவுள்ளன.

வழக்கமாக பிளாம்பயன் கப்பலிலேயே குடாநாட்டில் இருந்து தபால் பைகள் எடுத்துச் செல்லப்பட்டன. தென்பகுதி தபால்கள் யாழ் குடாநாட்டிற்கு அத்தியாவசியப் பொருள்கள் ஏற்றி வரும் கப்பல்கள் அனைத்திலும் எடுத்து வரப்பட்டன.

பிளாம்பயன் கப்பல் தனது சேவையை இடைநிறுத்தியதைத் தொடர்ந்து அத்தியாவசியப் பொருள்களை ஏற்றி வரும் சகல கப்பல்களிலும் தபால் பைகள் எடுத்து செல்லப்படுவதற்கும் தென் பகுதியில் இருந்து எடுத்து வருவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக தபால் பகுதியினர் தெரிவித்துள்ளனர். (இ)

# 10 கூட்டுறவு சங்கங்கள் நட்டத்தில் இயங்கின

[யாழ்ப்பாணம்]

இவ்வாண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் யூன் மாதம் முப்பதாம் திகதி வரையான காலப்பகுதியில் யாழ் மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் பதின்மூன்று சங்கங்கள் இலாபத்திலும், பத்து சங்கங்கள் நட்டத்திலும் இயங்கியுள்ளன.

இச் சங்கங்களின் படிவம் 28-ன் மூலம் பெறப்பட்ட இலாப நட்ட விபர அறிக்கையின் படி இலாபமீட்டிய சங்கங்களில் அதி கூடிய இலாபமாக 841, 775 ரூபாவை உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும், ஆகக் குறைந்த இலாபமாக 11,164 ரூபாவை கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கமும்ஈட்டியுள்ளன.

கட்டைவேலி - நெல்லியடி ப. நோ கூ. சங்கம் 10, 13, 129 ரூபா அதி கூடிய நட்டத்திலும் அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் 12, 198 ரூபா ஆகக் குறைந்த நட்டத்திலும் இயங்கியுள்ளதாகமேற்படி இலாப நட்ட விபர அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

## தியாகம் புரிய வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

'இயேசு கிறிஸ்து நாதரின் பிறப்பு நாளான கிறிஸ்மஸ் திருநாளையும் அதனோடு கூடிய வாரத்தையும் உலக கிறிஸ்தவ மக்கள் தியாகம் செய்வதில் கழிக்க வேண்டும்' என அன்னை திரேசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒவ்வொருவரும் தமது நிலைக்கேற்ப சிறு சிறு தியாகங்களையேனும் செய்வதை தவறாதுகடைப்பிடிக்க வேண்டும் என அன்னை திரேசா இவ்வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் கல்கத்தாவில் உள்ள தனது அலுவலகத்தில் அன்னை திரேசா இவ்வேண்டுகோளை விடுத்ததாக வத்திக்கான் வானொலிஅறிவித்தது. [22]

# கட்டுத்துவக்கு வெடித்து இருவர் படுகாயம்

[யாழ்ப்பாணம்]

கட்டுத்துவக்கு வெடித்து இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீவரெத்தினம் ஞானேந்திரன் [வயது 30], செல்லையா செல்வம் [வயது 35] ஆகியோரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

உடையார்கட்டு பகுதியைச் சேர்ந்த இவர்கள் இருவரும் காட்டுக்குள் விறகு வெட்டப் போனபோது தவறுதலாக

இடைநிறுத்தப்பட்ட

# வைத்திய அதிகாரிக்கு


இதோ! அறிமுகப்படுத்துகிறோம்!
ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா வழங்கும்**

அன்டி - டன்ரி
நெய் புரியாணி (கோழி-ஆட்டிறைச்சி)
சனி, ஞாயிறு தினங்களில் மட்டும்
பிற்பகல் 12. 00 மணி முதல் 3. 30மணிவரை
பெற்றுக் கொள்ளலாம்.

கோழி ரூபா 67. 50 மட்டுமே
ஆட்டிறைச்சி ரூபா 47. 50 மட்டுமே

ஏமாற்றத்தை தவிர்க்க முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

உங்கள் விருந்தகம்

சுண்டுக்குளி மகளிர்கல்லூரி
[முன் ஒழுங்கை]
சுண்டுக்குளி.


எமக்கு வேறு கிளைகள் இல்லை.

புது யுகத்தில் புது உருவம்

**ஜெசித்தாரா**

(சி-10867)


## 31-ம்நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
1942. 04. 15

ஆண்டவன் அடியில்
1994. 11. 12

**வே. சரவணமுத்து புத்திசியாமணி** (தவராசா)

[சிமெந்து கூட்டுஸ்தாபன ஊழியர், K.K.S. ]
(காங்கேசன்துறை காட்டடைப்பு வீதி)

அன்பின் உருவமாய் பாசத்தின் இருப்பிடமாய் விளங்கிய தெய்வமே பாசத்தால் பரிதவிக்கின்றோம் பாவிகளைப் பார்க்காயோ அன்புத் தெய்வமே! எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்டீரே.

தங்களின் ஆத்மா சாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி பூபாலச்சந்திரன்
'சரஸ்வதி பவனம்' அன்பு மனைவி,
மட்டுவில் தெற்கு (சகோதரி)

## சமையல் ஒரு கலை

அதனை நாங்கள் உங்களுக்கு நயமுடன் வழி சமைத்துத் தருகின்றோம். எங்களுடன் வந்து உங்கள் கீழைத்தேய, மேலைத்தேய உணவுகளை பகலிலோ அன்றி இரவிலோ பகிர்ந்து கொள்ளுங்கள்.

நிறைவான, சுகாதாரமான, சுவையான மனோரம்மிய சூழ்நிலையில் சமையலைச் சுவைக்க எங்களை சந்தியுங்கள்:

ஜோ. எகட்டனின்
உள்ளூர் விருந்தகம்
**ஜெசித்தாரா**
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.

நாங்கள் உங்கள் நாவிற்கு மேலும் சுவையூட்டுகின்றோம். எமக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை.

(சி-10868) (ஜோ. செனித்)



## திரு ரியுசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

**கல்வியாண்டு 95**

ஆண்டு 6, 7, 8-ம் ஆண்டுகளுக்கான
பிரிவு *III* ஆரம்பம் (17-12-94) சனி

| | | |
|---|---|---|
| கணிதம் | : | மகேந்திரன் |
| | | வாமதேவன் |
| | | பரா |
| விஞ்ஞானம் | : | சண் |
| | | ஆனந்தி |
| தமிழ் | : | N. S. மணியம் |
| | | யோகராணி |
| சமூகக்கல்வி | : | சிவநேசன் |
| | | மயூரன் |
| ஆங்கிலம் | : | ரமேஸ் |
| | | தர்மலிங்கம் |

(சி/10891)


# வைத்திய அதிகாரிக்கு இறுதிவரை சேவை நீடிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கடமை புரிந்து இடைநிறுத்தப்பட்ட மாவட்ட வைத்திய அதிகாரியை இம்மாதம் இறுதிவரை சேவை புரியுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய பதில் சுகாதார சேவைப் பணிப்பாளர் திரு. சிவகுரு இப்பணிப்புரையைக் கொண்ட கடிதத்தை வைத்தியசாலைக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

அதே சமயம் இவருடன் நிறுத்தப்பட்டிருந்த சிறுவர்களுக்கான நிபுணர் சேவை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை, மாவட்ட வைத்திய அதிகாரி கடந்த மாதம் 14ஆம் திகதி முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தார். (யோ)

சேர்ந்த இவர்கள் இருவரும் காட்டுக்குள் விறகு வெட்டப் போனபோது தவறுதலாக கட்டுத்துவக்கில் சிக்கிக் கொண்டனர். இதன்போது கட்டுத்துவக்கு வெடித்து இருவரும் துடையில் படுகாயமடைந்தனர். இவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுநேற்று முன் தினம் யாழ் போதனா வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [இ,நி]

# கொள்ளை இடம்பெறின் வீதி சோதனை நடத்துக

கொழும்பு மாநகரிலோ அதன் சுற்றுப் புறங்களிலோ கொள்ளைகள் ஏதும் நடைபெற்றால் நகரில்உடனடியாக வீதித் தடைபோட்டு வந்து செல்லும் அனைத்து வாகனங்களும் சோதனையிடப்படவேண்டும் என பொலிஸ் மா அதிபர் சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

கொள்ளை நடைபெற்ற பின்னர் இவ்வாறு வீதி சோதனை நடத்தப்படுவது நடைபெறாவிட்டால் இதற்கான பொறுப்பைஅப்பகுதிபொலிஸ் பொறுப்பதிகாரிமய பொறுப்பேற்கவேண்டும் என பொலிஸ் மாஅதிபர் எச்சரித்துள்ளார்.

மட்டக்களப்பில் இராணுவ வசமிருந்த

# பாடசாலை தளபாடங்கள் மீளப் பெறப்பட்டன

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு நகரில் உள்ள பாடசாலைகள் அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து மூன்று லொறிகளில்பாடசாலைத் தளபாடங்களைமீளப்பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பில் உள்ள பாடசாலைகளின் தளபாடங்களை கடந்த காலங்களில் இராணுவத்தினர் தமதுதேவைக்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

இவற்றை மீளப் பெறுவதற்கு மட்டக்களப்பு கல்விஅதிகாரிகள் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டும் பலன் அளிக்கவில்லை.

இதனை அடுத்து அவ்அதிகாரிகள் கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டு தமது பாடசாலைகளின் தளபாட தேவையை அழுத்திக் கூறியதை அடுத்து இராணுவத்தினரின் பாவனையில் இருந்த பாடசாலைத் தளபாடங்கள் மீளப்பெறப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு நகரில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ).பா)(தி)

# ஆசிரியர் தொழிலுக்கே பெருமளவில் விண்ணப்பம்

(திருநெல்வேலி)

மனித வள் மேம்பாட்டு அமைச்சினால் திரட்டப்பட்ட வேலையற்றோர் விபரத்திரட்டில் யாழ். மாவட்டத்தில் கூடுதலான இளைஞர், யுவதிகள் ஆசிரியத் தொழிலுக்கே விண்ணப்பித்துள்ளனர்.

வேலையற்றோரை கண்டறிந்து அவர்களுக்கான பணியை வழங்குவதான திட்டத்திற்கு அரசு நிதியை ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


யாழ் மாவட்டத்திலிருந்து இளைஞர், யுவதிகள் இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்கென சுபீட்ச வங்கிகள் நாடு பூராவும் அமைக்கப்படவுள்ளன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இவ்வங்கிகளில் முதலீடு செய்யவுள்ளார். (27)

### மண்ணெய் விநியோகம்

வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட மீனவர்களுக்கு அவ்வப் பிரிவு மீன் பிடி சங்கத்தினால் லீற்றர் 25 ரூபா வீதம் ஐந்து லீற்றர் மண்எண்ணெய் வழங்கப்படுகிறது. யோ

'சரஸ்வதி பவனம்' அன்பு மனைவி,
மட்டுவில் தெற்கு (சகோதரி)
சாவகச்சேரி. திருமதி பூபாலச்சந்திரன்
(10363) குடும்பம்

# ஈராண்டு இதய அஞ்சலி



தோற்றம்
18-03-1923

மறைவு
12-12-1992

## திரு. டானியல் வேதநாயகம்

(ஓய்வு பெற்ற இறக்குமதி ஏற்றுமதி திணைக்கள பிரதம கட்டுப்பாட்டாளர்)

பாசத்தை பொழிந்து அன்பாக வளர்த்திட்டு எங்களையெல்லாம் ஆளாக்கிய அருமையான அப்பாவே! தவிக்கவிட்டு எங்கு சென்றீர்கள். எங்களை வளர்த்த நீங்கள் எப்பொழுதும் எங்களையே சுற்றி நிற்பீர்கள்.

நடமாடும் வீட்டினில் படமாகி விட்டீர்கள், அப்பா, அப்பா என்று ஆசையுடன் கூறமுடியாதவாறு எம்மை அநாதைகள் ஆக்கிவிட்டு எங்கு சென்றீர்கள் அப்பா.

எங்களிடம் இருந்து உங்களைப் பிரித்தாலும் எங்கள் இதயத்தில நிலையாக நிற்கும் உங்கள் நினைவு ஈராண்டு என்ன எத்தனை ஆண்டு சென்றாலும் எங்கள் உள்ளத்தில் என்றும் நிலைத்திருக்கும். நீங்கள் இறைவனுடன் ஒன்றித்திருக்க கடவுளை வேண்டுகின்றோம்.

ஓயாது அழுததனால் ஈராண்டாய் போன பின்னும் காயாத கண்களுடன் காலமெல்லாம் காத்திருக்கும் -

பாசமிகு
**மனைவி, பிள்ளைகள், மருமகன்.**

இல, 11 கென்ஸ்மன் லேன்,
சாவகச்சேரி.

(10367)

# சுதந்திரப் பிரகடனம் செய்வதற்கு கியூபெக் மாநில அரசு திட்டம்

## கனடா அரசியலில் கொந்தளிப்பு

(ஒட்டாவா)

எழுபது லட்சம் பிரெஞ்சு மக்கள் கியூபெக் மாநிலத்தை ஒரு சுதந்திர நாடாக பிரகடனம்செய்யும் மசோதாஒன்றை மாகாண சட்டசபையில் சமர்ப்பிக்கப் போவதாக கியூபெக் பிரதமர் ஜெக்விஸ் பரிஸியோ அறிவித்து இருக்கிறார். அவர் மேலும் குறிப்பிடுகையில், இச் சுதந்திரப் பிரகடனச் சட்டம் அடுத்த ஆண்டில் சர்வசன வாக்கெடுப்புக்கு விடப்படும் எனவும், அதற்கு அடுத்த ஆண்டில் கியூபெக் சுதந்திரத் தனி நாடாக விளங்கும் எனவும் தெரிவித்தார்.

கியூபெக்கின் ஆளும் கட்சியான கியூபெக் ஜோய்ஸ் கட்சி அறிவித்துள்ள இத் திட்டம் கனடாவின் ஏனைய பகுதிகளில் பெரும் பரபரப்பை தோற்றுவித்துள்ளது. ஒட்டாவாவிலுள்ள சமஷ்டி அரசியல் வாதிகள் இத் திட்டத்தை ஒரு ஏமாற்றும் முயற்சியென குறிப்பிட்டு உள்ளனர். மக்களின் தைரியமான நடவடிக்கை மூலமாக அல்லாமல் கனடாவிலிருந்து கியூபெக்கை தந்திரமாகப் பிரிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது என நியூ பிரஸ்விக் மாநில பிரதமர் பிராங்க் மெக்கென்னா கூறியுள்ளார். கியூபெக் மக்களுக்கு எந்த விசேட அந்தஸ்தையும் அளிக்க மேற்கு கனடாவின் வலதுசாரி சீர்திருத்தக் கட்சி எதிர்த்து வரும் நிலையில் கியூபெக் அரசாங்கத்தின் திட்டம் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

தொடர்ந்து கனேடிய டாலரை பயன்படுத்தவும், கனடாவின் பொருளாதாரத்தில் பங்குப்பற்றவும் கியூபெக் அரசு தயாராக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. படை வெளியேறினால்

# பொஸ்னியாவுக்கு இராணுவ உதவி இஸ்லாமிய நாடுகள் வழங்கும்

(ஸாக்ரெப்)

ஐ. நா. வின் சமாதானப் படை பொஸ்னியாவிலிருந்து மீளப் பெறப்பட்டால் இஸ்லாமிய நாடுகள் துருப்புக்களையும், உபகரணங்களையும் அளித்து அவ் இடத்தை உடனடியாக நிரப்பும் எனக் கருதுகிறேன். இவ்வாறு துருக்கியின் வெளிநாட்டமைச்சர் முராட் கராய்ல்ஸ் கூறியுள்ளார்.

ஆனால் பொஸ்னியாவில் பெருமளவில் இஸ்லாமியத் துருப்புக்கள் இடம்பெறுவதை சேர்பியர்கள் எதிர்த்து வருகிறார்கள் ஐ. நா. சமாதானப் படையில் பெருமளவு துருக்கிய துருப்புக்கள் உள்ளனர்.

23, 000 பேர்களைக் கொண்ட ஐ. நா. அமைதிப் படை சேர்பியர்களால் தொல்லைக்கு உள்ளாக்கப்படுவதால் மீளப்பெறப் போவதாக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

சேர்பியர்கள் மீது விமானத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமைக்கு பதிலடியாக ஐ. நா. படையினர் மீது சேர்பியர்கள் தாக்குதல் நடத்துவதும் 317 ஐ. நா. படையினரை பிடித்து வைத்திருப்பதும் தெரிந்ததே.

# 15-ம் திகதி பேச்சுகளுக்கு வருமாறு ஐ.ஆர்.ஏக்கு அழைப்பு

பிரிட்டிஷ் பிரதமர் விடுத்தார்

(லண்டன்)

எதிர்வரும் 15 ஆம் திகதி பிரிட்டிஷ் அதிகாரிகளுடன் பூர்வாங்கப் பேச்சுகளை நடத்த வரும்படி பிரிட்டிஷ் பிரதமர் ஜோன்மேயர் வட அயர்லாந்தின் ஐ. ஆர். ஏ இயக்கத்தின் அரசியல் பிரிவுக்கு அழைப்புவிடுத்துள்ளார்.

ஐ. ஆர். ஏயின் அரசியல் பிரிவான சின்பெய்ன் உடன் முதல் பேச்சுகள் நடைபெறவுள்ள இச்சமயத்தில் பிரிட்டிஷ் பிரதமர் பாராளுமன்றில் இவ்வறிவிப்பை விடுத்தார்.

## அமெரிக்கா உதவலாம்

சிரியாவுடனான சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையைப் போக்கி பேச்சு வார்த்தைகளை தொடரச் செய்வதில் அமெரிக்கா உதவ முடியுமென்று இஸ்ரேலிய வெளிநாட்டு அமைச்சர் சிமென் பெரஸ் கூறியுள்ளார்.

புடாபெஸ்ட்டில் நடைபெற்ற ஐரோப்பிய பாதுகாப்பு உச்சி மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், டமாஸ்கஸ்சுக்கும், ஜெருசலேமுக்கும் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்வாரன் கிறிஸ்தோபர் மேற்கொள்ளும் விஜயத்தின் பெறுபேறுகளை நாம் பொறுத்திருந்தே பார்க்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

## இலக்கிய வாதிகளுக்கு 25,000 ரூபா பரிசு

தற்கால தமிழிலக்கியத்தில் அக்கறை கொண்டிருக்கும் அமெரிக்காவிலுள்ள தமிழர்கள் சிலர் ஒன்றிணைந்து விளக்கு என்னும் நிறுவனத்தினை ஆரம்பித்துள்ளனர். தற்கால தமிழிலக்கிய மேம்பாட்டிற்கு வழிவகுத்த படைப்புகளையும், படைப்பாளிகளையும் ஊக்குவிப்பதும், இவ் அமைப்பின் நோக்கம் என அறிவிக்கப்பட்டு இருக்கிறது. தற்கால தமிழிலக்கியத்திற்கு குறிப்பிடத்தகுந்த பங்களிப்பு செய்த இலக்கியவாதி ஒருவருக்கு புதுமைப்பித்தன் இலக்கியப் பரிசு என 25,000 ரூபா பரிசு வழங்கவும் இவ் அமைப்பு முன் வந்துள்ளது.

# ஆணவ உருவம் சேஷன் ஜெயலலிதா வர்ணிப்பு

(சென்னை)

அகந்தையின் மொத்த உருவம் தான் டி. என். சேஷன். இவ்வாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா கூறியுள்ளார். தமிழக தலைநகர், சென்னைக்கு தேர்தல் ஆணையாளர் டி. என். சேஷன் வருகை தந்த போது விமான நிலைய அதிகாரிகளுடனும், தமிழக அரச அதிகாரிகளுடனும், காவல் துறை அதிகாரிகளுடனும், பத்திரிகையாளர்களுடனும் நடந்து கொண்ட விதம் குறித்து தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா, பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது பற்றி கருத்து வெளியிட்ட டி. என். சேஷன் மிக்க மகிழ்ச்சி எனத் தெரிவித்துள்ளார்.

# ராவ் தலைமைத்துவத்தில் காங்கிரஸ் நம்பிக்கை

காங்கிரஸ் கட்சியின் தலைவரும், பிரதமருமான பி. வி. நரசிம்மராவின் தலைமைத்துவத்தில் காங்கிரஸ் கட்சியின் தேசிய செயற்குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தல்களின் முடிவுக்குப் பின்னர் முதல் தடவையாக நேற்று முன்தினம் புதுடில்லியில் கூடிய இச்செயற்குழு இத்தீர்மானத்தை நிறைவேற்றியது.

ஆந்திரா, கர்நாடகம், கோவா, சிக்கிம் மாநிலங்களில் ஏற்பட்ட தோல்வியை ஏற்பதாகவும் இத்தோல்வி பிரதமர் ராவ் தலைமையில் முன்னெடுக்கப்படும் கொள்கைகளின் தோல்வி எனக் கருதப்படலாகாது எனவும், மூன்றாண்டு காலத்தில் நடைபெற்ற தேர்தல்களில் வெற்றியும், தோல்வியும், மாறி மாறி ஏற்பட்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், மத்திய அமைச்சர்களான அர்ஜுன் சிங், சீதாராம் கேசரி, ராஜேஷ் பைலட், பல்ராம் ஜாக்கர் மற்றும் என். டி. திவாரி, ஆர். கே. தவான் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# தஞ்சை தமிழ் மாநாட்டிற்கு ஆளுநருக்குஅழைப்பில்லை

தஞ்சாவூரில் அடுத்த ஆண்டு ஜனவரியில் நடக்க இருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும்படி தமிழக ஆளுநர் டாக்டர் சென்னாரெட்டிக்கு இதுவரை அழைப்பு எதுவும் விடுக்கப்படவில்லை. இவ்வாறு தமிழக அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இம் மாநாட்டின் தொடக்க நாளன்று குடியரசுத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மாவும், இறுதி நாளன்று பிரதமர் பி.வி. நரசிம்மராவும் கலந்து கொள்வதற்கு ஒப்புதல் அளித்துள்ளனர் எனவும் குறிப்பிட்டார்.

## 8 ஆண்டுகள்நோயாளியின் வயிற்றில் கத்திரிக்கோல்

சத்திரசிகிச்சை வைத்தியரின் ஞாபகமறதியின் காரணமாக நோயாளி ஒருவர் எட்டு வருடங்களாக கத்திரிக்கோல் ஒன்றை தமது வயிற்றுக்குள் வைத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது ருமேனியாவில் இச்சம்பவம் இடம்பெற்றதாக அந்நாட்டு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யூஜினியா டெலிடெறியூ என்னும் அறுபது வயதுப் பெண்ணுக்கு 1986-ல் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை ஒன்றின்போதே இது இடம் பெற்றுள்ளது. பித்தப்பையை அகற்றிய இச் சத்திரசிகிச்சையின் போது மருத்துவர் ஆறு அங்குல நீளமான கத்திரிக்கோலை வயிற்றில் வைத்து தைத்துவிட்டார். எட்டு ஆண்டுகளின் பின்னர் தற்போது சத்திரசிகிச்சை மூலம் இக் கத்திரிக்கோல்வெளியே எடுக்கப்பட்டு இருக்கிறது.

தேயிலை உலகில் சாதனை படைக்கும் லிப்டனின் மற்றுமோர் உன்னத தயாரிப்பு

TAAZA

# டாஸா TAAZA

## புத்துணர்வூட்டும் புதுச் சுவைத் தேயிலை

லிப்டனின் டாஸா தேயிலை சிறப்பம்சங்கள்

★ அதிகளவு செறிவுள்ள சாயம்.
★ சோர்வைப் போக்கி உற்சாகத்தை மீட்டளிப்பது.
★ விருந்தினருடன் பருகி மகிழ்ந்து கொண்டாட விருந்தளிப்பது.
★ 100g, 200g, 400g பக்கெட்டுக்களில் கிடைப்பது.

களைப்பைப் போக்கி உற்சாக மூட்டும்
உன்னத பானம்

**லிப்டனின் டாஸா தேயிலை**

இல்லத்தரசிகளின் இதயம் கவரும்
இன்றைய பானம்.

புதுமையில் பெருமை சேர்க்கும் லிப்டனின் டாஸா தேயிலை இங்கிலாந்தின் நிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்டு அழகிய கண்கவர் பக்கெட்டுக்களில் அடைக்கப்பட்டு யாழ். குடா எங்கும் கிடைக்கிறது.

விநியோகஸ்தர்கள்:

**சிறி விக்னேஸ்வரா களஞ்சியம்**

இல. 148, கண்டி வீதி, சாவகச்சேரி.

கிளை:

**றூபா பன்முக வர்த்தகம்**

இல. 104 A, அருச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி) யாழ்ப்பாணம்.

(10362)

### சிந்தனைக்கு

எதனைச் செய்யாமலே இருக்கச் சித்தப்படுகிற யோ அதை மட்டுமே நாளை வரை ஒத்திப் போடு.
- பேப்லோ பிக்காஸ்ஸோ.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-12-94
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2330 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# முரண்பாடான அறிவிப்பு அரசின் புதிய யுக்தி?

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் பல விடயங்களில் ஒருவருக்கொருவர் முரண்பாடாகவே பேசிக் கொள்கின்றார்கள். அதிலும், இனப்பிரச்சினை விவகாரத்தில், அவர்களின் பேச்சுக்களில் பல முரண்பாடுகள் இருப்பதுண்டு.

ஒரு விடயத்தில் ஒவ்வொரு தனிமனிதனுக்கும் வெவ்வேறான, முரண்பாடான கருத்துக்கள் இருப்பது ஆச்சரியம் அளிக்கும் விடயம் இல்லைத்தான். இந்தவகையில் ஒரே அரசாங்கம், ஒரே அமைச்சரவை என்றரீதியில் இருப்பினும் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறுகருத்துக்கள் இருக்கலாம். ஆனால் அமைச்சரவைத் தீர்மானம் என்ற ரீதியில் அவ்வாறு ஒவ்வொருவருக்கும், ஒவ்வொரு கருத்துக்களோ, தீர்மானங்களோ இருக்க முடியாது. அமைச்சரவைத் தீர்மானம் என்பது தனிப்பட்ட கருத்துக்களுக்கு அப்பாற்பட்ட முடிவாகும்.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சர்களிடம் அது இருப்பதாகத் தெரியவில்லை. அமைச்சரவைத் தீர்மானம் என்ற ரீதியில் பேசும் அமைச்சரின் அறிவிப்பிற்கும், அவ்விவகாரத்துடன் தொடர்புடைய அமைச்சரின் அறிவிப்புக்கும் இடையிலேயே பெரும் வேறுபாடும், முரண்பாடும் காணப்படுகின்றது. இதற்கு யாழ். குடாநாட்டிற்கான பாதை திறப்பு விவகாரம் பற்றிய அறிவிப்புக்கள் சிறந்த உதாரணமாகும்.

இவ்விவகாரம் குறித்து கடந்த வியாழக்கிழமை பத்திரிகையாளர் மத்தியில் பேசிய அமைச்சரவைப் பேச்சாளரான தர்மசிறி சேனநாயக்கா, ''ஆனையிறவுப்பாதை திறப்பது தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அரசாங்கம் தகவல் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. புலிகள் ஒத்துழைத்தால்தான் அப்பாதையைத் திறப்பது சாத்தியமாகும்'' என தெரிவித்தார்.

இதேசமயம், விடுதலைப் புலிகளுடன் கடிதத் தொடர்பை மேற்கொண்டு வரும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரான அனுருத்த ரத்வத்த, ''ஆனையிறவுப் பாதை திறப்பது பற்றிப் பேசியே முடிவு எடுக்கப்படும். ஆனையிறவுப் பாதை திறப்பது பற்றி புலிகளுக்கு அரசாங்கம் அறிவிக்கவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக அமைச்சரவையின் தீர்மானங்களை அறி

# உலர் உணவு வேண்டாம்; அடிப்படை வசதிகளே தேவை

(திருகோணமலை)

நிவாரண உதவியாக உலர் உணவுகளை எமக்குத் தருவதற்குப் பதிலாக அடிப்படை வசதிகளையே செய்து தாருங்கள். இவ்வாறு திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருமலை மீனவர்கள் தெரிவிப்பு

திருகோணமலை மாவட்டத்தில் பெய்த பெருமழையின் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி வழங்கும் முகமாக மீன் பிடித்துறை பிரதி அமைச்சர் மில்றோய் பெர்னாண்டோ அண்மையில் சல்லி, சிறிமாபுரம், துஸ்ஸம்பு ரஜயந்திபுரம், நெல்சன் புரம் ஆகிய கிராமங்களுக்கு விஜயம் செய்திருந்தார்.

அப்போது மேற்படி கிராமங்களில் வாழும் மீனவர்கள் இக் கோரிக்கையை முன் வைத்துள்ளனர். அம் மீனவர்கள் மேலும் கூறுகையில், மீனவக்கிராமங்களில்போதிய சுகாதார வசதிகள் இல்லை. குடிநீர் பற்றாக்குறையுண்டு. மற்றும் வடிகாலமைப்புகள் சீராக இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடலரிப்பால் வீடுகள் பாதிக்கப்படுவதாகவும், மீன் பிடிப் படகு கட்டுவதற்கானபடகுத் துறை இல்லை எனவும் எடுத்துக்காட்டப்பட்டது.

## செஞ்சிலுவை கிளைக்கு மூடுவிழா

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அம்பாறைப் பிராந்திய அலுவலகம் மூடப்படவுள்ளது. நிதிப்பற்றாக் குறையே இதற்குக் காரணமென தெரிய வருகிறது. இங்கு பணிபுரிந்த ஊழியர்களுக்கும் தொண்டர்களுக்கும் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை எனவும் மேலும் கூறப்படுகிறது.

## மரக்கறி வகைகளின் விலைகள் உயர்வு

சமீபத்தில் தொடர்ந்து பெய்த பெருமழை காரணமாக குடாநாட்டில் மரக்கறி விலைகள் உயர்ந்துள்ளன.

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர், திருநெல்வேலி, சுழிபுரம், சாவகச்சேரி பகுதிகளில் தோட்ட நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட வெங்காயம், மரவள்ளி, பீற்றூட் கரட் போன்ற கிழங்குப் பயிர்களும், கத்தரி, போஞ்சி, பூசணி, புடோல், பாகற்காய் போன்ற பல பயிர்களும் அழுகி சேதமடைந்துள்ளன.

## இடம் பெயர்ந்தோர் நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கான செப்ரெம்பர் மாத இறுதி இரண்டு வார நிவாரணம் உலர் உணவுப் பொருட்களின் விநியோகத்தை தீவக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இன்று தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளதாக தெரிய வருகின்றது.

இவ் விநியோகத்திற்கான உணவுப் பொருட்கள் முழுமையாக வந்து சேரவில்லை என்றும், இவை முழுமையாக வந்து சேர்ந்ததும் திங்கள் தொடக்கம் விநியோகம் ஆரம்பிக்கப் படும் என்றும் தீவக பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் கூறியுள்ளன. (22)

**தொழிற்சங்கங்கள்**

# பேச்சுவார்த்தை நடத்த முன்வர வேண்டும்

- சந்திரிகா

(கொழும்பு)

உழைக்கும்மக்களும், அவர்களது தொழிற்சங்கங்களும் தத்தம் பிரச்சினைகளை முன் வைத்து பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும். இவ்வாறு ஜனாதிபதி திருமதி சந்திரிகா அரசாங்க,தனியார் துறை ஊழியர்களுக்கு அறைகூவல் விடுத்துள்ளார்.

# பிரதி அமைச்சர் சந்திரசேகரன் விரைவில் அமைச்சராகலாம்

-அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

பிரதி அமைச்சர் சந்திரசேகரன் விரைவில் அமைச்சராகலாம். இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை, பொது வசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல செத் சிறிபாயவில் பெருந்தோட்ட வீடமைப்பு, பொது வசதிகள் பிரதி அமைச்சர் சந்திரசேகரன் தனது அமைச்சர் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அங்கு மேலும் கூறுகையில், பிரதி அமைச்சர் சந்திரசேகரன் நீண்ட காலமாக அரசியல் போராட்டம் நடாத்தியவர். அவர் இன்று முக்கியமான பணியை மேற்கொண்டிருக்கிறார்.

பெருந்தோட்டத் துறை மலையகத்தில் மாத்திரமல்ல புளத்சிங்கள போன்ற தொகுதிகளிலும் இருக்கிறது. கடந்த 17 வருடங்களாக இந்த மக்களின் வீட்டுப் பிரச்சினை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக தோட்டங்களில் கம் உதாவ போன்ற திட்டங்கள் கூட அமைக்கப்படவில்லை. எமது சக்தியை பயன்படுத்தி இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பாடு படுவோம் எனவும் தெரிவித்தார்.

# பத்திரிகையாளர் இன்றும் தாக்கப்பட்டு வருகின்றனர்

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி

# படையினரின் கெடுபிடிகள் திருக்கோவிலில் அதிகரிப்பு

(அக்கரைப்பற்று)

திருக்கோவில் அக்கரைப்பற்று பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை படையினர் அதிகரித்துள்ளனர்.

பிரதான வீதிகளின் கரைகளில் வாழுபவர்கள் வேலிகளைக் கிடுகுகளால் மறைத்து அடைக்கக்கூடாது எனவும், வளவுகளுக்குள்ளே இருப்பவர்களின்நடமாட்டம் அவதானிக்கத்தக்கதாக இருக்க வேண்டும் எனவும் படையினர் அறிவுறுத்தியுள்ளனர். மேலும் மதில்களில்கூடஇடைவெளிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும், மிக உயரமாக மதில்கள் அமைக்கப்படக் கூடாது எனவும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இதேவேளை படையினரின் சுற்றிவளைப்புக்கள் திடீர் திடீரென இடம் பெறுவதாகவும், காடுகளிலும் பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்பதாகவும், காட்டு மிருகங்கள் கிராமங்களுக்கு வந்து தொல்லைப் படுத்துவதாகவும், விவசாயப் பயிர்களைச் சேதப் படுத்துவதாகவும் மேலும் தெரியவருகிறது.

**சிறையிலிருந்த வர்த்தகரின்**

# செலூலர் தொலைபேசியை அதிகாரி பயன்படுத்தினார்

(கொழும்பு)

தமது விடுதியில் வந்து தங்கிச் செல்லும் தமிழர்கள் பற்றிய பதிவுகளைப் பேணாமைக்காக நீர்கொழும்பு சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்த்தகர் ஒருவரின் செலூலர் தொலைபேசியைசிறைஅதிகாரி ஒருவர் முறைகேடாகப் பயன்படுத்தி இருக்கிறார்.

தடுப்புக்காவலில் இவ் வர்த்தகர் வைக்கப்பட்டிருந்த சமயம் அவரது செலூலர் தொலைபேசியை தவறாகப் பயன்படுத்திய சிறைச்சாலை அதிகாரி ஒருவர் சுமார் 24,000 ரூபா பெறுமதியான தொலைபேசி அழைப்புக்களைச் செய்துள்ளார். இவர் இதனைப் பயன்படுத்தி பல் வேறு வெளிநாடுகளுக்கும் தொலைபேசி மூலமான அழைப்புக்களை பெற்றுள்ளார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வர்த்தகர் புகார் செய்ததைத் தொடர்ந்து சிறை அதிகாரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன் விசாரணையும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தடுப்புக் காவலில் வைக்கப்படுபவர்களுக்கு சொந்தமான உடைமைகள்அனைத்தும் சிறை அதிகாரிகளால் பெறப்பட்டு தனியான களஞ்சியத்தில் வைக்கப்பட வேண்டும் என்பதே சட்டமாகும் என்பது தெரிந்ததே.

# யாழ். பாடசாலைகளிடையே ஆரோக்கியமான போட்டி

- சபாநாயகர் ரத்நாயக்கா

[கொழும்பு]

கல்வியில் யாழ்ப்பாண மாவட்டம் சிறந்து விளங்குவதற்கு அங்குள்ள பாடசாலைகளிடையே நிலவும் ஆரோக்கியமான போட்டியே காரணமாகும். இவ்வாறு சபாநாயகர் கே. பி. ரத்நாயக்கா கூறியுள்ளார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிசன் கல்லூரி மண்டபத்தில் யாழ். ஸ்கந்தவரோதய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், அவர் மேலும் கூறியதாவது.

ஒவ்வொருவரும் தமது உயர்ச்சிக்கு காரணமாக இருந்த பெற்றோரையும்தாம் படித்த பாடசாலையையும் உயிரினும் மேலாக நேசிக்க வேண்டும் எனது பெற்றோர்கள் என்னை 11வயதில் ஹாட்லிக் கல்லூரிக்கு அனுப்பிய படியால்தான் இன்று உங்கள்மத்தியில் தமிழில் பேச முடிகிறது எனவும் குறிப்பிட்டார்.

# வத்தளையில் தமிழர் ஒருவர் பொலிசாரால் கைது

பாலத்துறை குண்டுவெடிப்பில் காயமுற்றவராம்

அறிவிக்கவில்லை'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறாக அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிப்பவர்களின் கூற்றிற்கும் சம்பந்தப்பட்டவரின் கூற்றிற்கும் இடையில் உள்ள முரண்பாட்டை எவ்வாறு கொள்வது? அமைச்சரவைப் பேச்சாளருக்கு அரசாங்கத்தின் இரகசியங்கள் தெரியாது என்பதா? அன்றி அமைச்சரவைப் பேச்சாளர் அரசாங்கத் தீர்மானத்திற்கு எதிராகச் செயற்படுகின்றார் என்பதா? அல்லது அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு ஏற்பவே இவ்வாறு செயற்படுகின்றார் எனக் கூறுவதா?

ஆனால் இதில், அமைச்சரவைப் பேச்சாளருக்குத் தீர்மானம் தெரியாமல் இருப்பதற்கு நியாயமில்லை. ஆகையால், ஒன்று இத்தீர்மானத்தில் அமைச்சருக்கு உடன்பாடு இல்லாது இருத்தல் வேண்டும். அல்லது அரசாங்கத்தின் முடிவிற்கேற்பவே அவ்வாறு செயற்பட்டிருக்க வேண்டும்.

இதிலும், அமைச்சரவைப் பேச்சாளருக்கு அரசாங்கத்தின் முடிவில் விருப்பமின்மையிருப்பினும், பிழையான தகவல் ஒன்றை, வெளியிட்டு தான் அதன் மூலம் 'பொய்யன்' என்ற தனது 'இமேஜை' பாதிக்கும் நடவடிக்கையில் அவர் இறங்க மாட்டார். இந்த வகையில், இவ்வாறான முரண்பட்ட தகவலை வெளியிடுதல் என்பது அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறும் விடயமாகவே கொள்ள வேண்டும்.

இதை ஒத்தது போன்ற நடவடிக்கைகளையே இன்று அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள தொலைக்காட்சி மற்றும் வானொலியும் மேற்கொண்டு வருகின்றன. தொடர்ச்சியாக அவை வெளியிடும் முரண்பாடான செய்திகளுக்கு அரசாங்கம் தான் பொறுப்பல்ல என அறிவிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாயினும் அது இலகுவில் ஏற்றுக் கொள்ளக் கூடிய விடயமல்ல. ஏனெனில் அவற்றின் பணிப்பாளர்கள் உட்பட பலரையும் நியமனம் செய்யும் அரசாங்கம், தமது தேவைகளுக்கு முழுமையாக அவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும் அரசாங்கம் அதன் தவறுகளுக்கு தான் பொறுப்பல்ல எனக்கூற முடியாது.

இந்த நிலையில், தப்பான தகவல்கள், முரண்பாடான அறிவிப்புக்கள் என்பவை அரசாங்கத்தின் ஒரு யுக்தியோ என எண்ண வைக்கின்றது. ஆனால், இனப்பிரச்சினை போன்ற சிக்கலானதும், உணர்ச்சிகளை தூண்டக்கூடியதுமான விவகாரங்களில் அரசாங்கம் இவ்வாறான கொள்கைகளைக் கடைப்பிடிப்பது தவறாகும். இது பல பாதகமான விளைவுகளுக்கு வழிவகுத்துவிடும். இதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டி வரும்.

## தாக்கப்பட்டு வருகின்றனர்

(கொழும்பு)

பத்திரிகையாளர்கள் தொடர்ந்தும் தாக்கப்படுவதை இனியும் எம்மால் அனுமதிக்க முடியாது. பத்திரிகையாளர்கள் சுதந்திரப் பறவைகள். அவன் குற்றம் இழைத்தால் நீதி மன்றத்தில் நிறுத்த முடியுமே தவிர வேறு எவரும் அவனுக்கு தண்டனை வழங்க முடியாது. இவ்வாறு பத்திரிகையாளர் சங்க தேசிய செயலாளர் சிறிமல் பொன்சேக கூறியுள்ளார்.

காலி பத்திரிகையாளர் சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், பத்திரிகைகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால் அண்மைக் காலத்திலும் பத்திரிகையாளர்கள் தாக்கப்படுகின்றனர். கடந்த அரசாங்க காலத்தில் பத்திரிகைகளுக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதி, கொடூரங்கள் கொஞ்ச நஞ்சமல்ல எனவும் குறிப்பிட்டார்.

## பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவின் படி 166 புள்ளிகள் பெற்று சித்தி எய்திய புங்குடுதீவு இறுப்பிட்டி அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவி ஏ. சுகந்தா புங்குடுதீவுப்பகுதியிலேயே சித்தியெய்திய ஒரே யொருவர் என தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தீவகக் கோட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. )22)

## பாலத்துறை குண்டுவெடிப்பில் காயமுற்றவராம்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் காமினி திசாநாயக்கா உட்பட பலர் கொலையுண்ட பாலத்துறை குண்டுவெடிப்பு சம்பவத்தில் காயமுற்ற ஒருவர் வத்தளையிலுள்ள அவரது வீட்டில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவத்தில் சிறு காயத்துக்கு இலக்கான இவர் கொழும்பு பெரியாஸ் பத்திரியிலிருந்து வெளியேறி வத்தளையில் தனியான சிகிச்சை பெற்று வந்தார்.

சிங்களப் பெண் ஒருவரை மணந்த தமிழரான இவர் தாம் பொலிசாரிடம் தெரிவிக்காமல் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலிருந்து வெளியேறியது அச்சத்தினாலேயே ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுரகமொன்றில் சமையலாளராக இவர் பணியாற்றுகிறார் என்றும் தெரியவந்துள்ளது.

இதேவேளை இக்குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த செல்லையா வேலு (24 வயது) என்பவர் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். குண்டு வெடிப்பை மேற்கொண்டதாக சந்தேகிக்கப்படும் மலர் என்பவருக்கு உறவினர் என்ற சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இக் குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளை நடத்தும் பொலிசார் இந்தியாவுக்கு பயணமாகியிருப்பது தெரிந்ததே.

# முகாமையாளரை கூரையில் ஏற்றி தொழிலாளர்கள் போராட்டம்

## பொலிசார் தலையீட்டால் விடுவிப்பு

(கொழும்பு)

பணயம் வைக்கப்பட்ட பாண் தொழிற்சாலை முகாமையாளரும் அவரது உதவியாளரும் பொலிசாரினால் காப்பாற்றப்பட்டனர்.

ராஜகிரிய வெலிக்கடையில் உள்ள பாண் தயாரிப்பு நிலையமான பிறிமா தொழிற்சாலையில் இது நடைபெற்றது.

தமது சக ஊழியர் ஒருவர் வேலையில் இடைநிறுத்தம் செய்யப்பட்டு மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படாததால் விரக்தியுற்ற தொழிலாளர்கள் ஆத்திரமடைந்தனர்.

சம்பவதினம் சுமார் 100 ஊழியர்கள் பொதுமுகாமையாளரான வெளிநாட்டுக்காரர் ஒருவரையும் அவரதுஉதவியாளர் ஒருவரையும் பலவந்தமாக கூட்டிவந்து ஆறாவது மாடிக்கு அழைத்துச் சென்றனர். அங்குள்ள கூரைப்பகுதியில் இருவரையும் நிற்க வைத்தனர். அவதானக் குறைவாக இருந்தால் அங்கிருந்து கீழே விழுந்து உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய இடம் அது

அச் சமயம் அங்கு வந்த பொலிசார், அவர்கள் தொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தை நடாத்தி பணயக்காரர் இருவரையும் சாதுரியமாக மீட்டனர்.

# எந்தக் கட்சியுடனும் இனி ஐ.தே.க. கூட்டுச்சேரக்கூடாது

(கொழும்பு)

எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி எந்தவொரு கட்சியுடனும் கூட்டுச்சேரக் கூடாது. அவ்வாறு கூட்டணி அமைத்துப் போட்டியிடுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் இவ்வாறு கட்சியின் சிரேட்ட உறுப்பினர்கள் பலர்தலைமைப்பீடத்தை வலியுறுத்தி வருவதாகத் தெரியவருகிறது.

ஐ. தே.கவின் தலைமையகமான சிறி கோத்தாவில் அண்மையில் நடைபெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் இக் கோரிக்கை விடப்பட்டிருந்தது. இங்கு உரையாற்றிய ஊவா மாகாண முதல்வர் பேர்சி சமரவீர தேர்தலில் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக எந்தக்கட்சியோடும் கூட்டுச்சேரக் கூடாது. கடந்த பொதுத் தேர்தலில் இ.தொ.காவுடன் சேர்ந்து போட்டியிட்டதன் பயனை ஐ. தே. க இப்போது அனுபவிக்கிறது. ஐ. தே. கவின் பட்டியலில் இடம்பெறும் அனைவரும் ஐ. தே. கவின் உறுப்பினர்களாக இருப்பது அவசியம் எனத் தெரிவித்தார். பேர்சி சமரவீராவின் இக் கூற்றை நல்ல யோசனை எனக் கூறி ஐ. தே. க. தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான ஏ. ஸீ. எஸ் ஹமீத் உட்பட பலர் வரவேற்றுள்ளனர்.

## நிவாரணத்திற்கு மாவு இல்லை

இடப்பெயர்ந்தோருக்கான செப்ரெம்பர் மாத இறுதி இரண்டுவார நிவாரண உலர் உணவுப் பொருட்களில் மாவு வழங்கப்படமாட்டாது.

செயலக புனர்வாழ்வுப் பகுதியின் விநியோகப் பட்டியலின்படி அரிசி, சீனி, மைசூர் பருப்பு ஆகியவற்றுடன் நான்கும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் கொண்ட குடும்பங்களிற்கு 'கைலன்ட் பால்மா' என்பன வழங்கப்படும்.

198 இலக்க புள்ளிக்கு மேற்கொள்ளப்படும் இப்பொருட்களின் விநியோகத்தை இம் மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் முடித்துக் கொள்ளுமாறும் சங்கங்கள் கேட்கப்படுகின்றன. [22]

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.12.12**
**திங்கள் இரவு**

08-01 - தளிர்கள் - சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08.20 - தாயகப் பாடல்கள்
08.30 - செய்திகள்
08.40 - தரிசனம் - நிகழ்ச்சியில் மூத்த ஹார்மோனியக் கலைஞர் திரு. முருகேசு சோமசுந்தரம் அவர்களுடனான செவ்வி. செவ்வி காண்பவர் - சத்பா
09.00 மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**1994.12.13**
**செவ்வாய் காலை**

07.02 - மாவீர வணக்கம்
07.15 - இன்றைய தாரகை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - தாயகப்பாடல்கள்
08.00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள்யாவும் நிறைவு பெறும்.

# இலங்கையை ஆண்டவெளிநாட்டவரே இனப்பிரச்சினைக்குக் காரணமாம்

## வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

நாட்டில் இன்று நிலவும் இனப்பிரச்சினைக்கு இலங்கையை ஆண்ட வெளிநாட்டவர்களே காரணம். சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சிக் காலத்தில் மட்டுமே வடபகுதி மக்கள் நன்மை பெற்றனர். பின்னர் இந்நிலை காணப்படவில்லை. மற்றைய காரணம் நாட்டின் கல்விக்கொள்கையாகும். இதற்கு சகல அரசாங்கங்களும் பொறுப்பாகும். இவ்வாறு வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தமிழ் தினசரி ஒன்றிற்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். இப்பேட்டியின் விபரம் வருமாறு;

தமிழர்களும் வாழும் இந்நாட்டில் அனைத்து பிரிவினரினதும் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட தவறிவிட்டோம். சகல கட்சிகளும் அரசியல் லாபம் கருதியே செயற்பட்டன. இப்பிரச்சினை நீடிப்பதால் ஏற்படும் பாதகங்களை சிந்திக்க தவறிவிட்டோம்.

கேள்வி: இனப்பிரச்சினை குறித்த பேச்சுகள் மீள ஆரம்பிக்குமா?

பதில்: எனக்கு இதுபற்றி விசேடமாக தெரியாது. பேச்சுகள் நடக்க வேண்டும். காலம் கடத்துவதற்காக பேச்சுகள் நடக்கக்கூடாது. பேச்சுகளின் போது அவர்களது பிரச்சினையை நாமும் எமது பிரச்சினைகளை அவர்களும் உணர்ந்து விளக்கமாக பேச வேண்டும். சிறுபான்மையினர் போன்று பெரும்பான்மையினர் ஏற்றுக்கொள்ளும் தீர்வாக அமைவதே நிரந்தர தீர்வாக அமையும்.

கேள்வி: விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது குறித்து?

பதில்: விடுதலைப்புலிகளுடன் பேச வேண்டும் ஏனைய தமிழ்கட்சிகளுடனும் பேச வேண்டும் புலிகள் இணங்கினாலோ இணங்காவிட்டாலோ இப்பிரச்சினைக்கான எமது தீர்வு என்ன என்பதை நாம் மக்களுக்கு கூற வேண்டும் இப்பிரச்சினையில் எமக்கு நல்ல பெயரா கெட்ட பெயரா கிடைக்கும் என ஆலோசிக்கக் கூடாது இது தேசிய பிரச்சினை.

கேள்வி: காணப்படும் தீர்விற்கு தென்னிலங்கையில் எதிர்ப்பு கிளம்பினால்?

பதில்: நீதியான தீர்வாக இருந்தால் எதிர்ப்பு கிளம்பாது மக்களுக்கு யுத்தமல்ல சமாதானமேஇப்போது தேவை சகல தரப்பிலும் தீவிரமானவர்கள் இருக்கவே செய்வர் அவர்களை பார்த்துக்கொண்டுஇனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது மத்தியஸ்த நிலையில் இருப்பவர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதை பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

# சுதந்திரத்திற்காக தீவக மக்கள் முனைப்பாக ஈடுபட்டுவருகின்றனர்

- இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தீவகத்தைச் சேர்ந்த 191 மாவீரர்களும், 100 பொதுமக்களும் இதுவரை தமது இன்னுயிரை இழந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அல்லலுறும் வேளையிலும்சுதந்திரக்காற்றை சுவாசிப்பதற்கான போராட்டத்தில் முனைப்புடன் அவர்கள் ஈடுபட்டு வருவதை இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. இவ்வாறு தீவகம் - வளமும் வாழ்வும் நூல் அறிமுக விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய யாழ். மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் சி. இளம்பரிதி குறிப்பிட்டார்.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் தீவகக்கோட்ட கூட்டுறவு ஒன்றியம் நடாத்திய கலாநிதி கா. குகபாலன் அவர்களின் 'தீவகம் - வளமும் வாழ்வும்' நூல் அறிமுக விழாவிற்கு பேராசிரியர் செ. பாலச்சந்திரன் தலைமை தாங்கினார்.

இந்நூல் அறிமுக விழாவில் வாழ்த்துரைகளை திரு. சி. இளம்பரிதி, திரு. செஞ்சோழன். பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, திரு. கோ. விக்னேஸ்வரன், திருமதி ப. திலகநாயகம் போல் ஆகியோர் நிகழ்த்தினர்.

வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. க. பரமேஸ்வரன் நிகழ்த்தினார். ஆய்வுரையை பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் நிகழ்த்தினார். நூலின் முதல் பிரதியை திரு. சி. இராசரத்தினம் பெற்றுக் கொண்டார். அடுத்து நூலாசிரியர் உரையாற்றினார். நன்றியுரையை திரு. வே. செல்லத்துரை நிகழ்த்தினார்.

[சி] [05] [22]

# கிராம சேவகர்களுக்கு பழைய வர்த்தமானிகள்

(நவாலி)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் கிராம அலுவலர்கட்கு பழைய வர்த்தமானிகளை பிரதேச செயலகங்கள் அனுப்பி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

1991ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப் பகுதியில் சிறிலங்கா அரசினால் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தல் புத்தகம் காலத்திற்குக் காலம் சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுவந்தது. பின்னர் 1991 இன் பின் இது நிறுத்தப்பட்டது.

தற்போது மீண்டும் இதுவரை அனுப்பப்படாதிருந்த பழையவர்த்தமானிகளை பிரதேச செயலகங்கள் அனுப்பி வருகின்றன. காலம் தாழ்த்தி அனுப்பப்படும் இந்த வர்த்தமானிகளால் என்ன பயன் என கிராம உத்தியோகத்தர்கள் பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். (05)

# நிர்வாகசேவை வகுப்பு 2 பதவி உயர்வு வழங்க முடிவு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவை

கப்படல் வேண்டும்.

இது தொடர்பான சுற்ற

## இலவச கல்விச்சேவை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பிரதேச இந்து வாலிபர் சங்கம் இலவசக் கல்விச் சேவையை நடாத்திவருகின்றது.

வடலியடைப்பில் அமைந்துள்ள 'விவேகானந்த மனை'யில் அப்பகுதிமாணவர்களின் நன்மை கருதி இச்சேவையை வழங்கி வரும் இச்சங்கம் இரவு வேளைகளில் மின்சார வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## பாப்பரசர் படத்திற்கு கிராக்கி

(நல்லூர்)

பரிசுத்தபாப்பரசர் இலங்கை வருவதை முன்னிட்டு அவரது திரு உருவம் பொறிக்கப்பட்ட கைக்கடிகாரங்கள், ஸ்ரிக்கர்கள் ஆகியவை கொழும்பில் மிகுந்தவிற்பனை செய்யப்பட்டுவருவதாகவும், அவரது உருவம் இடப்பட்ட கைக்கடிகாரம் ஒன்று ரூபா ஐந்நூறுக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இப்படியும் ஒரு மோசடி

(யாழ்ப்பாணம்)

வீட்டிலிருந்து சென்றவர் விபத்தில்சிக்கி ஆபத்தான நிலையில் உள்ளார் என அவரின் வீட்டிலுள்ளோர்க்கு தெரிவித்து பணம் அபகரித்த சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த வெள்ளியன்று யாழ். புகையிரத நிலையப்பகுதியில் வைத்திய நிலையம் ஒன்றை நடத்திவரும் வைத்தியர் மதியமளவில் வீட்டிலிருந்து பொருள்கள் வாங்கிவர புறப்பட்டு சென்றுள்ளார்.

இவர் சென்ற சிறிது நேரத்தில் வீட்டுக்கு வந்த நபர் ஒருவர் அவ் வைத்தியரின் வீட்டாரிடம் மோட்டார் சைக்கிளில் சென்ற மேற்படி நபர் யாழ். நகரில் விபத்திற்குள்ளாகி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் உடன் செலவுக்காக ஆயிரம் ரூபா பெற்றுவருமாறு தம்மை அனுப்பியதாகவும் கூறினார்.

வைத்தியரினதும் குடும்பத்தினரதும் பெயர் விபரங்களை சரியாக அந் நபர் கூறியதால் அவரின் பேச்சை நம்பி குடும்பத்தினர் ஆயிரம் ரூபாவை அவரிடம் கொடுத்தனுப்பினர். சிறிதுநேரத்தில் அவ் வைத்தியர் நலமாக வீடு வந்து சேர்ந்தபோதே தாம் ஏமாற்றப்பட்ட விடயத்தை அவர்கள் அறிந்துகொண்டனர். (22)

# வறுமை ஒழிப்பிற்கு 1200 மில். ரூபா ஒதுக்கீடு

இலங்கையில் உள்ள 264 பிரதேச செயலகங்களில் வறுமையை முற்றாக ஒழிப்பதற்கு 1200 மில்லியன் ரூபாவை ஜனசக்தி நம்பிக்கை பொறுப்பு நிதியம் தனது வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரி முதல் நாடளாவிய ரீதியில் நடாத்தப்படும்வறுமைஒழிப்பு நிகழ்விற்கு அமெரிக்க ஸ்தாபனம் ஒன்று தொடர்ந்து நிதிவழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வறுமை ஒழிப்புடன் கிராமிய சமூக அபிவிருத்தியும், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சியை மேம்படுத்தல் போன்றவற்றிற்கும் இவ் ஸ்தாபனம் உதவி வழங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# 6 இளைஞர் மர்ம மறைவு

(திருக்கோவில்)

இரவு சினிமா பார்ப்பதற்காக வீடுகளிலிருந்து புறப்பட்டுச் சென்ற ஆறு இளைஞர்கள் வீடுகளுக்கு திரும்பவில்லையெனப் பெற்றோர் புகார் செய்துள்ளனர்.

இந்த ஆறு பேருக்கும் என்ன நடந்தது என்பது தொடர்பாக கவலையுற்றிருக்கும் பெற்றோர் இது தொடர்பாக பாதுகாப்பு படையினரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

கல்வி மேம்பாட்டுக்கழக

# ஆசிரியர்களின் மாதாந்த உதவித்தொகை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

கல்வி மேம்பாட்டுக் கழகம் ஆசிரியர்களுக்கான மாதாந்த உதவுதொகைக் கொடுப்பனவுகளை வழங்கவுள்ளது. கோட்டரீதியாக இவ் உதவு தொகைகள் அந்தந்தக் கல்விக்கோட்ட அலுவலகங்களில் வைத்து வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இதன்படி தென்மராட்சிக் கல்விக்கோட்ட ஆசிரியர்கள் நாளை காலை 9 மணிக்கும், சண்டிலிப்பாய், தெல்லிப்பளைக் கல்விக்கோட்ட ஆசிரியர்கள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9மணிக்கும், சங்கானைக் கல்விக் கோட்ட ஆசிரியர்கள் எதிர்வரும் வியாழன் காலை 9 மணிக்கும் உடுவில் கல்விக் கோட்ட ஆசிரியர்கள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் கோப்பாய் கல்விக் கோட்ட ஆசிரியர்கள் வெள்ளி பிற்பகல் 2 மணிக்கும் அந்தந்த கோட்டக்கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

உதவு தொகை பெறும் ஆசிரியர்கள் தவறாது வருகை தருவதுடன் தத்தமது பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்திய உதவு தொகைப் பட்டியலையும் பெற்று வரும்படி கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

# இரண்டாம் ஈழப்போரில் கடற்படை இழப்பு அதிகம்

இரண்டாம் ஈழப்போரில் சிறீலங்கா கடற்படையினர் அதிகளவில் உயிர்ச்சேதத்திற்கும் பொருட்சேதத்திற்கும் முகம்கொடுத்துள்ளனர் என்பது கடற்படையினர் வெளியிட்ட உயிரிழந்தோர் பட்டியலில் இருந்து தெரியவந்துள்ளது.

சிறீலங்கா கடற்படை தனது 44 ஆவது வருட நிறைவை கடந்த வெள்ளியன்று அனுஷ்டித்தது. அது தொடர்பாக கடற்படையின் பௌத்த சங்கம் வெளியிட்ட உயிரிழந்த கடற்படையினரின் பெயர்ப் பட்டியலில் இருந்து மேற்கண்ட தகவல் வெளியாகியுள்ளது.

கடற்படையினரில் அநேகமானோர் பூநகரி தாக்குதலில் இறந்துள்ளனர்.

# ராஜீவ் கொலை வழக்கை முடக்க

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா சிவஞானம்

(நீதிமன்ற ஊழியர், மல்லாகம்)

பருத்தித்துறை தற்கோவளத்தை பிறப்பிடமாகவும்

## பதவி உயர்வு வழங்க முடிவு

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையின் இரண்டாம் வகுப்பு இரண்டாம் தரத்திற்கு பதவி உயர்வு வழங்க பொது நிர்வாக அமைச்சு முடிவு செய்துள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் அந்தந்த திணைக்கள தலைவர் ஊடாக இம் மாதம் 30ஆம் திகதிக்குமுன்பு பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான சுற்றறிக்கை அனைத்து திணைக்கள தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

விண்ணப்பங்கள் பதிவுத் தபாலிலேயே அனுப்பிவைக்கப்படல் வேண்டும். 68வகையான அரச பதவிகளுக்கு பதவி உயர்வு வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

யாழ். தொழில்நுட்ப கல்லூரி

## கைப்பணி கற்கை நெறியில் மேலதிக ஆறு அலகுகள்

(நவாலி)

யாழ். தொழில்நுட்ப கல்லூரிக்கு இவ் வருடம் தேசிய கைப்பணி தராதர பத்திர கற்கை நெறியில் ஆறு மேலதிக அலகுகள் ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடத்தில் இக் கற்கை நெறிகளில் சில அனுமதிக்கப்படாதபோதும் இவ் வருடம் பூரணமாக இந் நெறிகளை அமுல்நடாத்தஏற்பாடுசெய்துள்ளதாக தொழில் பயிற்சி அமைச்சு அறிவித்துள்ளது.

வானொலி மற்றும் இலத்திரனியல், மோட்டார் வாகனம் சீர்காப்பு, பொருத்து வல்லுநர், டிராக்டர் மற்றும் நீர்பம்பி திருத்துதல் உட்பட ஆறு அலகுகளில் கற்கை நெறி அடுத்த வருடம் நடாத்தப்படவுள்ளதாக அறிவித்துள்ளது. (05)

### புல்மோட்டை

காப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தவிற்கு புகார் அனுப்பப்பட்டிருப்பதுடன் உடன் விசாரணை நடத்துமாறும் கோரப்பட்டுள்ளது. இரவு 10 மணியளவில் நடைபெற்ற தேடுதலின் போது பலர் தாக்கப்பட்டதுடன் வீடுகள், கடைகள் என்பன படையினரால் எரிக்கப்பட்டன. இதில் முஸ்லிம்களின் கடைகளும் தீயிடப்பட்டுள்ளன.

### யுத்தநிறுத்தத்தை

அறிவேன். எம் மத்தியில் வாழும் இலங்கையரினுள் அநேகமானோர் தமிழர்கள். இலங்கையில் சமாதானம் ஏற்படவேண்டும் என்பதில் அவர்களும் ஆர்வமாக உள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் அண்மையில் யுத்த நிறுத்தத்தை அறிவித்ததையடுத்து சமாதான தீர்விற்கான பாதை திறக்கப்பட்டுவிட்டது என தமிழர் தரப்பில் பிரமுகர்கள் நம்புகின்றனர் என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## எரிகாயம்

(யாழ்ப்பாணம்)

நித்திரையில் ஆழ்ந்திருந்தவர் மீது மேசையில் இருந்த விளக்கு வீழ்ந்து தீப் பற்றிக் கொண்டதில் உறங்கிக் கொண்டிருந்தவர் எரிகாயங்களுக்குள்ளானார்.

வட்டுக்கோட்டை மாவடிப் பகுதியில் நேற்று இரவு நடந்த இச் சம்பவத்தின் போது எம். தவபாலன் (வயது 34) என்பவரேஎரிகாயங்களுக்குள்ளானவராவார். (சி)

# ராஜீவ் கொலை வழக்கை முடக்க பல்வேறு முயற்சி நடக்கிறதாம்

(டில்லி)

'ராஜீவ் கொலை வழக்கு விசாரணை அடுத்த ஆண்டு செப்டம்பருக்குள் முடிய உள்ளதால்தான் இந்த விசாரணையை முடக்க பலமுனைகளிலும் முயற்சிகள் நடக்கின்றன' என்று மத்திய அரசு உள்துறை அமைச்சக உயர் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சக உயர் அதிகாரிகள் டில்லியில் தெரிவித்ததாவது: கார்த்திகேயன் தலைமையிலான சிறப்புப் புலனாய்வு குழுவின் விசாரணை எங்களுக்கு முழு திருப்தியைத் தந்துள்ளது- சர்வதேச அளவில் பாராட்டுக்கள் கிடைத்துள்ளன- துப்பறியும் தொழில்நுட்ப ஆலோசனைகளைக் கேட்கும் அளவுக்கு நம் அதிகாரிகள் சாதனை புரிந்திருப்பது இந்தியாவுக்கே பெருமை.

ராஜீவ் காந்தி கொலை வழக்கு சென்னை அருகே பூந்த மல்லியில் விசேஷ நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. அடுத்த ஆண்டு செப்டம்பர் இறுதிக்குள் அனைத்து முக்கிய சாட்சியங்களும் பதிவாகி முடிந்துவிடும்- அந்த அளவுக்கு விசாரணைப் பணிகள் துரிதமாக நடந்து வருகின்றன.

இந்த பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டும் நிலையில் இந்த பணிகளை முடக்கபல்வேறு தரப்புகளில் தடைகள் ஏற்படுத்த முயற்சிகள் நடக்கின்றன. இவற்றில் ஒன்று தான் முருகன் விசேஷ நீதிமன்றத்துக்கு வர மறுத்து வருவது ஆகும்- இவரின் வரவு இல்லாததால் விசாரணைப் பணிகள் திடீரென்று ஸ்தம்பித்து வருகிறது. இதை மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

### கிளாலி

இனம் காணப்படவில்லைஇதற்குள் மீசாலைதெற்கு என்ற முகவரி காணப்பட்டது.

இதேவேளை கிளாலிக் கடல் வழியூடாக பயணம் செய்த பெண்மணி ஒருவருடைய 53, 000ரூபாபெறுமதியான நகைகளும் பணமும் திருடப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை படகில் பயணம் செய்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நவரத்தினம் பாக்கியம் என்பவர் கிளாலிக் கரையில் சேர்ந்து பஸ்சில் இருந்து பார்த்த போது தனது பையில் இருந்த நகை மாயமாக மறைந்து விட்டதையும் பையின் சிப் திறந்து காணப்பட்டது. இத் திருட்டு பஸ்சில் ஏறும்போது இடம் பெற்று இருக்கலாம் என கருதப் படுகிறது.

இதேவேளை கடந்த21ஆம் திகதி அன்றும் கொடிகாமத்தைச் சேர்ந்த செல்லையா ஜெகநாதன் என்பவருடைய 10, 000 ரூபா பெறுமதியான நகைகள், மணிக்கூடு என்பன படகில் வைத்து இனம் தெரியாதவர்களால் பூட்டுஉடைக்கப்பட்டு எடுக்கப்பட்டுள்ளதாக பளை காவல் துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாகபுலன் விசாரணைகளை காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (86)

## மூன்று கப்பல்களிலும் பொருட்கள் இறக்கம்

பருத்தித்துறை இறங்கு துறையில் நேற்றைய தினம் மூன்று கப்பல்களில் இருந்து அத்தியாவசிய உணவு மற்றும் பொருட்கள் ஒரே நேரத்தில் இறக்கப்பட்டதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்தது.

''குமண'', ''மாகோ'', ''கோமாரி'' ஆகிய மூன்று கப்பல்களே ஒன்றாக பருத்தித்துறையில் பொருட்களை இறக்கியுள்ளன.

யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவுத்தட்டுப்பாட்டைப் போக்குமுகமாக கடற்கொந்தளிப்பின் மத்தியிலும் இழுவைப்படகுகள் பழுதடைந்த நிலையிலும் மூன்று கப்பல்களில் இருந்து பொருட்கள் இறக்கப்பட்டுள்ளன.

### பரீட்சார்த்தி

அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

இதனால் இம்மாணவர்கள் பரீட்சைக்கான நாள் நெருங்கிவிட்ட போதிலும் உண்மையான நிலைமையை அறிந்து கொள்ள முடியாத நிலையில் பெரும் குழப்பமடைந்த நிலையில் உள்ளனர். இனியாவது இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய பதிலை திட்டவட்டமாக அறிவிப்பார்களா. என மாணவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

## மேலும் ஒரு கப்பல் தேவை

வடபகுதிக்கு அத்தியாவசிய பொருள்களை எடுத்து வர தற்போது சேவையில் உள்ள கப்பல்கள் போதாது என்றும் மேலும் ஒரு கப்பல் இப் பணிக்கென சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்றும் யாழ். செயலக அதிகாரிகள் கொழும்பில் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிடம் வலியுறுத்தியுள்ளன இவ்வாறு ஈடுபடுவதன்மூலமேபொருள் விநியோகத்தை தடையின்றி தம்மால் வழங்கமுடியும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

## முத்தையா சிவஞானம்

(நீதிமன்ற ஊழியர், மல்லாகம்)

பருத்தித்துறை கற்கோவளத்தை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சிவஞானம் 11-12-94 நேற்று சிவபதம் அடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற முருகப்பர் முத்தையா பார்வதி தம்பதிகளின் அன்பு மகனும் சத்தியபாமாவின் அன்புக் கணவரும் விஜிதரின் அன்புத் தந்தையும் மு. இரட்ணராஜா (கப்டன்), ஆனந்தா (கனடா- முன்னைநாள் பெருந்தெருக்கள் திணைக்கள இலிகிதர்), ப. விஜயலட்சுமி, க. சரோஜினிதேவி (அமெரிக்கா), அ. இந்திராணி ஆகியோரின் சகோதரனும் பொ. பரமயோகராஜசிங்கம், இ. சிவபாலா, ஆ சந்திரரட்ணம், மு. கனகநாயகம் (அமெரிக்கா- முன்னைநாள் கிராம அலுவலர் காங்கேசன்துறை), மு. அருமைநாயகம் (கிராம அலுவலர் காங்கேசன்துறை தெற்கு) ஆகியோரின் மைத்துனரும் அனிதாவின் சிறியதகப்பனும் பிரபாவதி, பிரியதர்சினி, சோபிகா, பிருந்தன், பிரியந்தன், சுஜிந்தர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12 - 12 - 94 இன்று பி. ப. 1. 30 மணிபளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காக தாவடிமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

''மலர் வாசம்'' இ. மு. அருமைநாயகம்

சுதுமலை மத்தி, (கிராம அலுவலர், காங்கேசன்துறை தெற்கு)

மானிப்பாய். மைத்துனர்.

(10373)

## கோணர் கந்தையா

நவக்கிரி புத்தூரைச் சேர்ந்த கோணர் கந்தையா 11-12-94 நேற்று காலமானார். அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சின்னத்துரை. யோகேஸ்வரி, இராசதுரை (சுவிஸ்), இராசலட்சுமி, மகேஸ்வரி (சுவிஸ்), தவம், தங்கேஸ்வரி, வாமதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சி. பரமேஸ்வரி, கா சிவசோதி, ஐ. அழகரட்ணம் (சவுதி), நா. விஜயகுமார் (சுவிஸ்), சு. தனபாலன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சோ. மதுராந்தகி, சோ. நிசாந்தினி, சோ. சிவதர்சன். சோ. நீரோஜன், சி. பாமினி, சி. செந்தூரன் அ. வினோத், அ. டயானா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12. 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

க. சின்னத்துரை

[மகன்]

ஆவரங்கால் மேற்கு,

புத்தூர். (நவக்கிரி)

[10374]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 12 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.